விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 29 திங்கட்கிழமை (15.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 331

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஜே.வி.பி.உறுப்பினர்கள் மீது நேற்று இனந்தெரியாதோர் தாக்குதல்!

### கந்தர்மடம் பழம் வீதியில் திகில்

(யாழ்ப்பாணம்)

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் மூவர் நேற்றிரவு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தனர்.







இத்தாக்குதல் சம்பவம் யாழ்.கந்தர்மடம் பழம் வீதியிலுள்ள முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வீட்டில் வைத்து நடைபெற்றுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் காணமல் போனோரின் விபரங்களை வெளியிட வேண்டுமெனக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று நாம் இலங்கையர் இயக்கம் கையெழுத்து நடவடிக்கையை ஆரம்பிக்கவிருக்கிறது.

இந்த நடவடிக்கைக்கு ஆதரவு கோரி ஜே.வி.பி. உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து வருகின்றனர்.

இந் (16ஆம் பக்கம் பார்க்க)

### காணாமல்போனவர்களை விடுவிப்பதாக கூறி கப்பம்

## கிளிநொச்சியில் நடந்த மோசடி

## நேற்று வெற்றிகரமாக முறியடிப்பு

(கிளிநொச்சி)

இறுதி யுத்தத்தின்போது காணாமல் போனவர்களை கண்டுபிடித்துத் தருகிறோம். நாங்கள் கேட்கும் பணத்தை தரவேண்டும் எனக் கோரி கிளிநொச்சிப் பகுதியில் மோசடியில் ஈடுபட்டவர்களின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று நடந்த இச்சம்பவம் கிளிநொச்சியை பெரும் பரபரப்புக்குள்ளாக்கியது. (16ஆம் பக்கம் பார்க்க)

### முப்படைத் தலைமையகம் அக்குராகொடவிற்கு

(கொழும்பு)

இராணுவம், கடற்படை மற்றும் வான் படை ஆகியவற்றின் தலைமையகங்கள் அக்குராகொடவிற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்தரமுல்ல பெலவத்த பகுதியில் அமைந்துள்ள அக்குராகொட பிரதேசத் (16ஆம் பக்கம் பார்க்க)

### கோத்தபாய படுகொலை முயற்சி; அறிக்கை சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தொடர்பான அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்வதற்கு தீட்டப்பட்ட சூழ்ச்சித் திட்டம் குறித்து விரிவான அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை தலைவர்களுக்கு படிப்பினை-ரணில்

(கொழும்பு)

பர்மாவில் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி விடுதலை செய்யப்பட்ட சம்பவம் இலங்கைத் தலைவர்களுக்கு ஓர் படிப்பினையாகும் என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நோபல் சமாதான விருதினை வென்ற ஆன் சான் சூகி விடுதலை செயயப்பட்டமை ஜனநாயகத்தை நேசிக் (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பொது நூலகத்தில் அடாவடித்தனத்தில் ஈடுபட்டவர்களை ஏன் கைது செய்யவில்லை

### பொலிஸாரிடம் ஆணைக்குழுத் தலைவர் கேள்வி



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தில்நுழைந்து அசம்பாவிதத்தில் ஈடுபட்ட சிங்கள சுற்றுலாப் பயணிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்காததற்கான காரணம் என்ன?

இவ்வாறு ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினர் கடந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளின் துணைத் தளபதி கேணல் விநாயகம் வெளிநாட்டில்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் சாலைப் பகுதியில் நின்றுகொண்டிருந்த 55ஆவது படையணியின் மீதான ஊடறுப்பு தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட கடற்புலிகளின் துணைத் தளபதி கேணல் விநாயகம் தற்போது வெளிநாடு ஒன்றில் நலமாக இருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, விநாயகம் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு பல தடவைகள் உறுதிப்படுத்திய போதும் அவரின் சடலம் கைப்பற்றப்படவில்லை.

கிளி (16ஆம் பக்கம் பார்க்க)

## நீச்சல் தடாகத்தில் மூழ்கி இளைஞன் பரிதாப மரணம்

### யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஆசீர்வாதம் ஒழுங்கையிலுள்ள முன்னணி உல்லாச விடுதியின் நீச்சல் தடாகத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கீறின் கிறாஸ் உல்லாச விடுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த றெனோல்ஸ் றீகன் (வயது 28) என்ற ஹரிதாஸ்-கியூடெக் நிறுவன ஊழியரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ந-5)

## தீவகத்தில் ஆணைக்குழு விசாரணை சோகத்தால் அவை கலங்கியது

(ஊர்காவற்றுறை)

தெல்லிப்பழை தடுப்பு முகாமுக்கு இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட எனது கணவர் தொடர்பில் எதுவித தகவல்களும் இல்லையென மனைவி ஞானசுகிர்தன் வளர்மதி கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன் சாட்சியமளித்தார்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று ஊர்காவற்றுறை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களிடம் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் தேவாலயத்தில் கூடியது.

இதன் போது சாட்சியமளிக்கையிலேயே ஞானசுகிர்தன் வளர்மதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில், வன்னி யுத்தம் உக்கிரமடைந்த போது வடமராட்சி கிழக்கு பகுதியிலிருந்து 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்தோம்.

அங்கிருந்து எங்களை இராணுவத்தினர் அழைத்து வந்து சாவகச்சேரி (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யுத்தத்தில் குடும்பத் தலைவர்களை இழந்த எங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவுங்கள்

## தீவகத்தில் ஆணைக்குழுவிடம் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

யுத்தத்தால்பாதிக்கப்பட்டுவறுமையிலுள்ள எங்களுக்கு அரசிடம் வாழ்வாதார உதவிகளைப் பெற்று தாருங்கள் என மூன்று விதவைப் பெண்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் சாட்சியமளித்தனர்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினர் நேற்று ஊர்காவற்றுறை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களிடம் ஊர்காவற்றுறை அந்தோனியார் ஆலயத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

இதன்போது சாட்சியமளித்த நெடுந்தீவைச் சேர்ந்த கணேஷ நாயகம் கருணைமலர்,

கிளிநொச்சியில் வசித்த நான் யுத்தம் காரணமாக பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து இறுதியாக புதுமாத்தளனில் குடியிருந்தேன். 2009 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யுத்தம் உக்கிரமடைந்த காலப் பகுதியில் எனது கணவர் ஷெல் தாக்குதலில் உயிரிழந்துவிட்டார்.

இந்நிலையில் நானும் மூன்று பிள்ளைகளும் தற்போது எதுவித உதவியுமின்றி பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் வாழ்கின்றோம்.

எனவே எனது குடும்பத்திற்கு அரசாங்கத்திடமிருந்து வாழ்வாதார உதவிகளைப் பெற்றுத் தருமாறு ஆணைக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

இதன்போதுசாட்சியமளித்தநெடுந்தீவைச் சேர்ந்த குகதாஸன் சாந்தினி தேவி,

வன்னி இறுதி யுத்தத்தின் போது 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 20 ஆம் திகதி சுதந்திரபுரத்திலிருந்த போது எனது கணவர் ஷெல் வீச்சில் உயிரிழந்தார். இதனால் நான் தனிமையில் எதுவித வாழ்வாதாரமுமின்றி நெடுந்தீவில் வாழ்ந்து வருகின்றேன். எனக்கு அரசிடமிருந்து உதவிகளைப் பெற்றுத் தாருங்கள் என்று கேட்டார்.

இவ் விசாரணையின்போது நெடுந்தீவைச் சேர்ந்த தயாபரன் சிவாஜினி சாட்சியமளிக்கையில், 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி புது மாத்தளனில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் எனது கணவர் உயிரிழந்தார்.

தற்போது ஒரு ஆண் குழந்தையுடன் எதுவித வாழ்வாதாரமுமின்றி இருக்கிறேன். எனவே அரசாங்கத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

இவர்களது கோரிக்கைகளுக்கு பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர், உங்களுடைய பிரச்சினைகள் போன்று பலரின் சாட்சியங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறான குடும்பங்களின் வாழ்வாதாரத் திட்டங்களைஅரசு வழங்கவேண்டும் என்ற சிபார்சினை ஜனாதிபதியிடம் வழங்குவோம் என்றார். (ந-5)

# ஐ.நாவின் போர்க் குற்ற விசாரணை புதிய புகைப்படங்கள் பரிசீலனைக்கு

(நியூயோர்க்)

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் பொதுமக்களின் இழப்புக்கள் குறித்து விபரிக்கும் புதிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், இலங்கையின் பதிலளிக்கும் கடப்பாடுகள் தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவானது புதிய புகைப்படங்களைப் பரிசீலனைக்கு எடுக்கக்கூடும் என்று ஐக்கிய நாடுகளின் பதில் பிரதி பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியுள்ளார்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் இது தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தது.

இலங்கையின் பதிலளிக்கும் கடப்பாடு தொடர்பாக பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களடங்கிய குழுவானது இந்த மாதிரியான சாட்சியத்தை பரிசீலனைக்கு எடுக்க முடியுமா? என்று இன்னர் சிற்றி பிரஸ், பர்ஹான் ஹக்கிடம் வினவியிருந்தது.

எது பொருத்தமானது என்பதை தீர்மானிப்பது நிபுணர் குழுவைப் பொறுத்த விடயம். எனினும் இந்தப் புகைப்படங்கள் வரையறைக்குள் உள்ளடக்கப்படக்கூடிய தன்மையை கொண்டவையாக இருக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்கள மக்கள் உடன் வெளியேற வேண்டும்

## இல்லையேல் நீதிமன்றம் செல்வோம் - ஸ்ரீகாந்தா



(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் அரசாங்கக் காணிகளில் குடியேறிய சிங்களக் குடும்பங்கள் ஒரு வாரத்திற்குள் வெளியேற்றப்பட வேண்டும். தவறினால் நீதிமன்றங்களை நாடுவதே ஒரேவழியாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அவரின் இல்லத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

நாவற்குழியில் அரசாங்க காணிகளில் திடீரென குடியேறிய சிங்கள குடும்பங்களின் நடவடிக்கை அரசியல் பின்னணி கொண்டது மாத்திரம் அல்லாது முற்றிலும் சட்டவிரோதமானதுமாகும்.

தென்னிலங்கையில் இருந்து யாழ்.புகையிரத நிலைய கட்டிடங்களில் அத்துமீறி குடியேறி, தற்போது நாவற்குழிக்கு நகர்ந்து அரசாங்க காணியில் குடியேறியுள்ளனர். இந்த நடவடிக்கையின் பின்னணியில் பலமானதோர் அரசியல் சக்தி செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது ஓர் ஆழம் பார்க்கும் நடவடிக்கை. இதனை ஒரு பொழுதும் கைகட்டி பார்த்திருக்க முடியாது.

இந்த சிங்கள குடும்பங்களுக்கு யாழ்ப்பாணத்தில் சொந்தமாகக் காணிகள்இல்லை. இவர்கள் இங்கு 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வசித்தார்கள் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை. ஒருசிலர் இங்கே வாழ்ந்திருக்கக் கூடும்.

நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் இவர்கள் யாழ்ப்பாணத்தில் காணிகளை சொந்தமாக வாங்கி குடியேறுவதையோ அல்லது வாடகைக்கு வீடுகளை எடுத்து வசிப்பதையோ எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் முன்பு இங்கு வாழ்ந்தோம் எனக்கூறிக்கொண்டுஅரசாங்க காணிகளில் அத்துமீறி குடியேறுவதில் அரசியல் நோக்கம் இருப்பது அப்பட்டமானது. இந்த சட்டவிரோத நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டே ஆகவேண்டும்.

அரசாங்கக் காணிகள் தொடர்பில் இலங்கையின்அரசியல்அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் இலங்கை அரசாங்கமும் வட மாகாண சபையும் அதிகார ஆதிக்கத்தைக் கொண்டுள்ளன. எனவே இந்த இரண்டு தரப்பும் நாவற்குழி விவகாரம் தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளன.

இச் சட்டவிரோத குடியேற்றவாசிகளை சம்பந்தப்பட்ட அரசாங்க காணிகளில் இருந்து அப்புறப்படுத்தவோ அல்லது அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கவோ இலங்கை அரசாங்கமும் வடமாகாண சபையும் தவறினால் நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை.

இதற்கென ஏற்கெனவே கொழும்பில் உயர்நீதிமன்றங்களில் தொழில் புரியும் தமிழ் சட்டத்தரணிகள் சிலரைக் கொண்ட குழு சட்ட நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## வெளி நோயாளர் பிரிவு இன்று முதல் இரவு 8 மணிவரை

அரசாங்க வைத்தியசாலைகளில் இன்று திங்கட்கிழமை முதல் வெளி நோயாளர்கள் பிரிவுகள் இரவு 8 மணிவரை திறந்து வைக்கப்படவுள்ளன.

வெளி நோயாளர் பிரிவுகளை 24 மணித்தியாலமும் திறந்து வைக்கப்படுவதற்கான திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவே இன்று முதல் இரவு 8 மணிவரை திறந்து வைக்கப்படவுள்ளன.

அரசாங்க வைத்தியசாலைகளிலுள்ள வெளி நோயாளர்கள் பிரிவுகள் தற்போது மாலை 4 மணி வரை மாத்திரமே இயங்கிவருகின்றன.

சகலமாவட்ட பொது மற்றும் போதனா வைத்தியசாலைகளும் இந்த விதிக்கு அமைந்து செயற்படும். இதேவேளை இந்த வைத்தியசாலைகளில் 24 மணிநேர அவசர சிகிச்சைப் பிரிவு சேவை வழமைபோல் தொடரும் என சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர் தர்ம வன்னிநாயக்க கூறினார். (ந-5)

# வடக்கில் குடியமர தயாராகுங்கள் முஸ்லிம் மக்களிடம் ஜனாதிபதி

உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகளில் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்று வேறுபாடு காட்டவேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று மாலை அமைச்சர்றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாட்டில் இடம்பெற்ற வட மாகாண முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 20 வருட பூர்த்தியை நினைவுகூரும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

இங்குள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொண்டர் நிறுவனங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி செய்யும் போது சிங்களவர், தமிழர், முஸ்லிம் என பாகுபாடு காட்டாமல் உள்நாட்டில் இடம்பெயர்ந்த அகதிகள் என்ற நோக்கில் சேவை செய்ய வேண்டும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள அகதிகள் அனைவரையும் மீளக்குடியேற்றவேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அந்த அடிப்படையில் அனைவரையும் மிக விரைவில் மீளக்குடியேற்றவுள்ளோம். உங்கள் சொந்தப் பிரதேசங்களுக்கு மீளக்குடியேற நீங்கள் அனைவரும் தயாராகுங்கள் என்றார். (ந-5)





## காணி விற்பனைக்கு

இல.62, B.S. லேன், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள கிணற்றுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளிற்கு :
முருகானந்தா உணவகம்
கே.கே.எஸ். றோட்,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P. No : 0773696767
(சு-1628)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அருகாமையில் மாடி வீடொன்று விற்பனைக்குண்டு.
தொடர்பிற்கு :
0215680323
(2859)

## வேலையாள் தேவை

சிறி கற்பக விநாயகர் தளபாட நிலையத்திற்கு பெண் வேலையாட்கள்உடன்தேவை. கவர்ச்சிகரமான சம்பளம்வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்.
சிறி கற்பக விநாயகர் தளபாட நிலையம்
512, K.K.S. வீதி,
மனோகராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P : 0778689581
(2875)

# மரண அறிவித்தல்



## இளையவி அண்ணாமலை

(ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்)

கோயிற்புலம் தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி அண்ணாமலை (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (12.11.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம் அவர்களின் அன்புக் கணவரும், உமா, ராதா(ஜேர்மனி), அருட்குமரன், அருள்மைந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினவடிவேல்(கட்டார்), மணிவரதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நடராசா, செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பிநாதன், பரஞ்சோதிநாதன், ஜெயபாலன், சோபியா மற்றும் காலஞ்சென்ற பரமநாதன் ஆகியோரின் மைத்துனரும் நீல்ஸ், கரிராம், மகாதீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (16.11.2010) காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயிற்புலம்,
தெல்லிப்பழை.

(2876)

தகவல்
குடும்பத்தினர்

# இன்று ஒரு தகவல்

## அறிவு பலம்

இந்தக் காலத்தில் சின்னப் பிள்ளைகளை சமாளிப்பது மிகவும் கஷ்டம்.

ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்பு முடிந்து மணி அடித்து விட்டது. பிள்ளைகளெல்லாம் சந்தோஷமாக சத்தம் போட்டுக் கொண்டே வெளியே ஓடிவந்தார்கள்.

ஒரு பெரியவர் அந்த வழியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் காலில் புதிய செருப்பு போட்டிருந்தார். பார்ப்பதற்கு நன்றாக இருந்தது.

ஒரு குறும்புக்கார பையன் இதைக் கவனித்தான். இவரை எப்படியாவது ஏமாற்றி அந்தச் செருப்பை எடுத்துக் கொண்டு ஓடிப் போய் விடவேண்டுமென்று நினைத்தான். மற்ற பையன்களுடன் சேர்ந்து ஒரு திட்டம் போட்டான். இன்னொரு பையன் அந்தப் பெரியவரை ஏமாற்றுவதற்கு ஒரு யோசனை சொன்னான்.

அதாவது.... அவரை ஒரு மரத்தில் ஏறச் சொல்லுவோம். அவர் செருப்பை கழற்றிப் போட்டுவிட்டு மேலே ஏறுவார்.

உடனே நாம் அதைத் தூக்கிக்கொண்டு ஓடி விடுவோம். என்றான்.

'சரி' என்று எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள்.

உடனே எல்லோரும் நல்ல பிள்ளைகள் போல அந்தப் பெரியவரிடம் போனார்கள்.

"ஐயா, எங்களால் இந்த மரத்தில் ஏற முடியவில்லை. நீங்கள் பெரியவர். உங்களுக்கு அனுபவம் இருக்கும். நீங்கள் ஒருதரம் ஏறிக் காட்டினீர்கள் என்றால் நாங்கள் கற்றுக் கொள்வோம்." என்றார்கள்.

பெரியவர் 'சரி' என்று ஒத்துக்கொண்டார். இருந்தாலும் அவருடைய மனதுக்குள் ஒரு சந்தேகம்.

'என்னத்துக்கு இப்படி திடீரென்று இந்தப் பையன்கள் கேட்கிறார்கள்' என்று சந்தேகித்தார்.

ஒரு பையன், காலிலிருக்கும் செருப்பை கவனிப்பதையும் அவர் கவனித்துவிட்டார்.

'சரி... இருக்கட்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

"சரி, பிள்ளைகளே! உங்களுக்கு மரம் ஏறித்தானே காட்ட வேண்டும். இதோ பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

பையன்களுக்கு மனதுக்குள் படுகுஷி!

'பெரியவர் ஏமாந்துவிடப் போகிறார்' என்று.

மிகவும் அக்கறையாக அவரை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெரியவர் என்ன செய்தார் தெரியுமா?

செருப்புகளைக் கழற்றி தன் இடுப்பில் செருகிக் கொண்டு மரத்தில் ஏற ஆரம்பித்தார்.

பையன்கள் திகைத்துப் போய் நின்று விட்டார்கள்.

திட்டம் நிறைவேறாது போல இருக்கிறதே! என்று நினைத்தார்கள்.

ஒரு பையன் அவரைப் பார்த்து,

"ஐயா.... பெரியவரே! மரத்தின் மேல் ஏறும்போது என்னத்துக்கு செருப்பைக் கூடவே எடுத்துக் கொண்டு போகிறீர்கள்? அங்கே என்ன நடைபாதையாக இருக்கிறது? அதனால் செருப்பை கீழே போட்டுவிட்டுப் போங்களேன்" என்றான்.

அதற்கு அந்தப் பெரியவர்,

"நீ சொல்வது மாதிரி செருப்பைக் கீழே போட்டுவிட்டுப் போகலாம். ஒருவேளை மரத்தின் மீது நடைபாதை இருந்தால் என்ன செய்வது? அதற்குத் தான் எதற்கும் இருக்கட்டுமே என்று எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு போகிறேன்" என்றார்.

அதனால் புத்திசாலிகளை ஏமாற்றுவது கஷ்டம்.

இதை சிறியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். உடம்பு பலம் மட்டும் இருந்தால் போதாது. அறிவுபலம் வேண்டும். அதை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு குரங்கு மரம்மீது உட்கார்ந்திருந்ததாம். அந்த மரத்துக்கடியில் ஒரு சிங்கம் நின்று கொண்டிருந்தது.

சிங்கத்துக்கு சரியான பசி. மிகவும் சாமர்த்தியமாக அந்தக் குரங்கைப் பார்த்து, "ஏன் அங்கேயே உட்கார்ந்திருக்கிறாய்? கீழே இறங்கி வா. விளையாடலாம்" என்றது.

குரங்கு பார்த்தது.

"நான் கீழே இறங்கி வந்தால் நீ என்னைத் தின்றுவிடுவாய். அதனால் உன் வாயை மூடிக்கட்டிக் கொள். உன்கால்களையும் சேர்த்துக் கட்டிக்கொள். அதன்பின் வேண்டுமானால் இறங்கி வருகிறேன்" என்றது.

சிங்கம் அதே மாதிரி செய்துவிட்டது. தன் வாயையும் காலையும் இறுக்கிக் கட்டிக்கொண்டது.

அதன் பின் அந்தக் குரங்கு இறங்கிக் கீழே வந்தது.

சிங்கத்திடம் போனது.

அப்பொழுது அதன் உடம்பு நடுங்கியது.

"ஏன் நடுங்குகிறாய்?" என்று கேட்டது சிங்கம்.

"நான் நடுங்கவில்லை. உணர்ச்சி வசப்படுகிறேன்." என்றது குரங்கு.

"ஏன்?" என்று கேட்டது சிங்கம்.

"முதல் தடவையாக இன்றைக்குத்தான் சிங்கத்தின் கறியைத் தின்னப் போகிறேன். அதனால் தான் அப்படி" என்றது குரங்கு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி -2011

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற் துறை மன்றமும் வரையறுக்கப் பட்ட இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனமும் இணைந்து மிகவும் பிரமாண்டமான முறையில் நடத் தும் சர்வதேச வர்த்தகக் கண் காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங் கில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய உள்நாட்டு, வெளி நாட்டு உற்பத்தி, சேவை வழங் குநர்களுடன், வட மாகாண உற் பத்தி, சேவை வழங்குநர்களும் இணைந்து தமது உற்பத்தி, சேவை களைக் காட்சிப்படுத்துவதற்கு ஏது வாக 200 காட்சிக்கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போதைய சமாதான சூழலில் கைத்தொழில் முயற்சியாளர்கள் அதிநவீன தொழினுட்பங்களுட னான தொழில் முயற்சிகளை முன் னெடுப்பது, தர முகாமைத்துவத்து டனான சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச தொடர்புகளை ஏற்படுத் தல் மற்றும் புதிய தொழில் முயற்சி களை உருவாக்குவதற்கேற்ற வழி முறைகளை கண்டறிதல் போன்ற வற்றிற்கு மிகச் சிறந்த வாய்ப்பாக இக்கண்காட்சி அமையவுள்ளது.

எனவே இக்கண்காட்சியில் பங்கேற்க ஆர்வமுள்ளோர் இலக் கம் 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப் பாணம் வர்த்தக தொழிற்துறை மன்ற அலுவலகத்துடன் எதிர் வரும் 20 ஆம் சனிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொண்டு காட்சி க்கூடங்களை பதிவு செய்யு மாறு இம்மன்றத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரி ச.யோகராஜ சிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

*15.11.2010*

*(ஐப்பசி 29, திங்கட்கிழமை)*

*நவமி பிற்பகல் 3.13 மணி வரை*

*சதயம் முன்னிரவு 9.50 மணி வரை*

*இராகு காலம் 7.37-9.07 மணி வரை*

*சுபநேரம் 12.07-1.37 மணி வரை*

**மேடம்** கையில் காசுப் புழக்கம் அதிகரிக்கும், வீட்டுத்தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும், மரியாதையும் உயரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள்.

**இடபம்** அரை குறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள், மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலில் முன்னேற்றகரமான நிலை தோன்றும்.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப் படுவீர்கள், திடீர் பயணத்தின் மூலம் நன்மையடைவீர்கள், தொழில் தொடர்பாக புதிய திட்டங்கள் வகுப்பீர்கள்.

**கடகம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், வருமானம் வருவதற்கு முன்பே செலவுகள் காத்திருக்கும், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை அமையலாம்.

**சிங்கம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், கணவன், மனைவியிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வெளியூர் பயணம் விருப்பத்தை நிறைவேற்றும், தொழிலில் உற்சாகமாகச் செயற்படுவீர்ள்.

**கன்னி** கொடுக்கல், வாங்கல்களை ஒழுங்கு செய்துகொள்ள முன்வருவீர்கள், உத்தியோகத்தில உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட உபத்திரவம் குறையும், உடல் நலம் புத்துணர்வு பெறும்.

**துலாம்** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், உத்தியோகத்தில் உயர்வுண்டு, ஊதிய உயர்வு வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, உஷ்ணரீதியான உபத்திரவமுண்டு.

**விருச்சிகம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசமான தகவலொன்று வந்து சேரும், உறவினர் வருகையுண்டு, பெற்றோரில் பிரியம் கூடும், சுப செலவுகளால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**தனுசு** நீண்ட நாளைய பிரச்சினைகளில் புதிய திருப்பமான சூழ்நிலை அமையும், சகோதரர் வழியில் எதிர்பாராத நன்மையுண்டு, செல்வாக்கான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**மகரம்** எதிர்கால வளர்ச்சிக்கு இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** தொழில் நன்மை கருதி புதிய நபர்களை சந்திக்கும் எண்ணம் உருவாகும், கற்பனை அதிகமுண்டு, விரயங்கள் கூடும், சான்றோரின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள்.

**மீனம்** உறவினரின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், மூத்த சகோதரர் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பர், வருமானம் திருப்தி தரும், உயரதிகாரிகள் மனக்குறையாக நடந்து கொள்ளலாம்.

வளவன்

# தொழில் முயற்சியாளருக்கான இயந்திர உபகரண கண்காட்சியும் கருத்தமர்வும்

(யாழ்ப்பாணம்)

முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளருக் கான இயந்திர உபகரண கண்காட்சியும் கருத்தமர்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக் கம் மாலை 3.30 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் பிரதி யமைச் சர் வீரகுமாரதிசநாயக்க செய லாளர், கைத்தொழில் அபி விருத்தி சபை தலைவர், பொது முகாமையாளர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்ச்சித் திட்டமானது இலங்கை கைத் தொழில் அபிவிருத்தி சபை யால் வடமாகாண சிறிய நடுத்தர கைத்தொழிலாள ருக்காக ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. இதனூடாக உள் ளூர் இயந்திர உபகரண உற்பத்தியாளர் தமது உற் பத்திகளை காட்சிப்படுத்த முடியு மென குறிப்பிடப்படுகிறது. அத்துடன் கைத்தொழில் அபி விருத்தி சபையின் உற்பத்திகளான இயந்திர உபகரணங்களும் தென் பகுதி உற்பத்தியாளரின் உற்பத்தி களும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வின் போது தொழில் முயற்சியாளருக்கான தொழில் மேம்படுத்தல் ஆலோசனை கருத் தரங்கும் இடம்பெறவுள்ளது.

எனவே மேற்குறித்த நிகழ்வில் தொழில் முயற்சியாளர்களை கலந்து பயனடையுமாறு யாழ்.கைத் தொழில் அபிவிருத்தி சபையின் பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மாபெரும் விழிப்புணர்வு வழிகாட்டல் கருத்தரங்கு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அடுத்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர் களின் பெற்றோருக்கான மாபெரும் விழிப்புணர்வு, வழிகாட்டல் கருத் தரங்கு நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை யில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பொ.அருண கிரிநாதன் தலைமையில் நடை பெறவுள்ளது. (ஸ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | மருதனார்மடம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| மரக்கறி வகைகள் | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 40 | 80 | 70 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 80 |
| பாகற்காய் | - | 160 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 140 | 150 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 110 |
| கறிமிளகாய் | 120 | 120 | 130 |
| முருங்கைக்காய் | - | 160 | 150 |
| போஞ்சி | 140 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40 | 35 |



சீனக்குடியரசின் நிதியுதவியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், "புத்தூர் -மீசாலை" வீதியின் நிர்மாணத்தை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

## லசந்தவின் தொலைபேசியை திருடியவருக்கு கடூழிய சிறை

(கொழும்பு)

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க, படுகொலை செய்யப்பட்ட வேளையில் அவரின் கையடக்கத் தொலைபேசியை திருடிய ஒருவருக்கு 6மாத கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கல்கிஸை நீதிமன்றம் இந்தத் தண்டனையை வழங்கியதுடன் ஆயிரத்து 500 ரூபா பிணையையும் நீதிமன்றம் விதித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்டார்.

இதேவேளை, கொலையாளிகள் பயன்படுத்திய தொலைபேசி சிம் அட்டை தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள நுவரெலியாவை சேர்ந்த தமிழரான பிச்சை ஜேசுதாசன் என்பவரை எதிர்வரும் 19 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

## மாணிக்கக் கற்களை கடத்திய வர்த்தகர் சுங்கப்பிரிவினரால் கைது

உள்ளாடைகளுக்குள் மறைத்த நிலையில் நாட்டுக்குள் மாணிக்கக் கற்களை கடத்தி வந்த பேருவளை பிரதேச வர்த்தகரொருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான மேற்படி மாணிக்கக் கற்களை தனது உள்ளாடைகளிலும் பயணப் பொதியிலும் மறைத்து வைத்து கடத்தி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், கட்டுநாயக்கா பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## வரவு- செலவுத் திட்டத்தின் பின் பாரிய தொழிற்சங்க போராட்டம்

### தேசிய தொழிற்சங்க சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தேசிய தொழிற்சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு 9 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கே.டி.லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்பார்க்கப்பட்டளவு சம்பள உயர்வு வழங்கப்படாத பட்சத்தில் பாரியளவு தொழிற்சங்க போராட்டங்கள் வெடிக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் தற்போது சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு- செலவுத் திட்டத்தில் நிச்சயமாக 9 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாதென்பது உறுதியாகியுள்ளதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் பாரியளவு தொழிற்சங்க போராட்டங்களை நடத்துவதனைத் தவிர வேறு வழியில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மின்கம்பியில் மோதி உயிரிழந்தவரின் சடலம் காட்டுப் பகுதியிலிருந்து மீட்பு

சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பி ஒன்றில் மோதி உயிரிழந்த ஒருவரின் சடலம் மறைத்து வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக செட்டிக்குளம் பொலிஸார் விசாரணையை ஆரம்பித் துள்ளனர்.

வனவிலங்கு வேட்டையாடுவதற்காகப் பொருத்தப்பட்டிருந்த மின்கம்பி ஒன்றில் மோதி குறிப்பிட்ட நபர் உயிரிழந்து உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நபர் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது உயிரிழந்தவரின் சடலம் புளியங்குளம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 3பேரை பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கைது செய்து வவுனியா நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர். நீதவானின் உத்தரவுக்கு அமைய சந்தேக நபர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

## ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான சட்டமூல திருத்தத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் ஆகியவை தொடர்பான சட்டமூலம் திருத்தம் செய்யப்படுவதற்கு எதிராக அகில இலங்கை நிறுவன சேவையாளர் சங்கம் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது.

இந்தத் திருத்தம் காரணமாக தனியார் துறையைச் சேர்ந்த சேவையாளர்களுக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை என அந்த சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளை இன்று தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப் பிட்டார்.


ஊழியர் சேமலாப நிதியத் திருத்தச் சட்டமூலம் குறித்து தொழில்துறை அமைச்சர் காமினி லொக்குகேயிடம் கேட்டபோது, இந்தத் திருத்தம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, நிதியத்தின் 30 சதவீதத்தை 10 வருடங்களுக்கு மேலாக தொழில் புரிந்து 3 இலட்சத்துக்கும் அதிகமான தொகையைக் கொண்ட ஊழியர் மீளப் பெறமுடியும் எனக் குறிப்பிட்டார்.

இது ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி பெற்றுக்கொள்ளும் தேவைகள் இருப்பின் அது தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியங்களை பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனவும் தொழில்துறை அமைச்சர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## ஈழத்தமிழர் போராட்ட வரலாறு தெரியாதவர் தங்கபாலு

### வைகோ காட்டம்



(தக்கலை)

ஈழத் தமிழர் போராட்ட வரலாறு தெரியாதவர் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ குற்றஞ் சாட்டியுள்ளார்.

கன்னியாகுமாரி மாவட்டம்திங்கள் நகரில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ம.தி. மு.க. பொதுக்கூட்டத்தில் அவர்மேலும் பேசியதாவது,

ஈழத் தமிழர்களுக்கு வைகோ என்ன செய் தார் என தமிழக காங்கிரஸ் தலைவர் தங்க பாலு விமர்சனம் செய்துள்ளார். இதைப்பற்றி நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை ஈழத்தமிழர் போராட்ட வரலாறு தெரிந்திருந்தால் அவர் என்னைப் பற்றி விமர்சித்திருக்கமாட்டார்.

இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது, நாடாளுமன்றத்தில் இது குறித்து கவனஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினேன். பங்களாதேஷைப் போல தமிழ் ஈழத்தையும் உங்களால்தான் உருவாக்கி கொடுக்கமுடியும் என வலியுறுத்தினேன். சுவீடன் நாட்டுக்கு சென்று மனித உரிமை ஆணையாளரிடம் ஈழத் தமிழர்களின் நிலை குறித்து 21.10.1998 இல் மனு கொடுத்தேன்.

விடுதலைப்புலிகள் மீதான தடைகள் நீக்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தில் 8 நாட்கள் சென்று வாதாடினேன். விடுதலைப்புலிகள் மீதான தடை மேலும் 2ஆண்டுகள் நீடிக்கும் என்ற தீர்ப்பால் நான் துவண்டுவிடவில்லை என்ற தெரிவித்தார். (ஸ்ரீ

**PHARMACIST (EXTERNAL) EXAM DEC/2010**


கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தால் நடாத்தப்படும் மருந்தாளர் (வெளிவாரி) எழுத்துப் பரீட்சை கொழும்பில் 18.12.2010ஆம் திகதி நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்ப இறுதித் திகதி 22.11.2010. இந்த பரீட்சைக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணக் கல்லூரி (வெளிவாரிப் பட்டப்படிப்பு) 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகிறது.

may /2010இல் நடைபெற்ற மருந்தாளர் எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான practical/Viva பரீட்சை Jan/2011 இல் கொழும்பு பல்கலைக் கழகத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு :-

இராசநேரு சத்தியசாயி மெடிக்கல் கிளினிக் + பார்மசி, பிரதான வீதி, பருத்தித்துறை. தொ.பே:-0773164251

(2871)



வட இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவத் தலைவி மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி செ.பாலேந்திரன் தலைமையுரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் கலந்துகொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:கரவெட்டிசெய்தியாளர்)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அரச திணைக்களங்களால் ரூ.74 ஆயிரம் மில்.இழப்பு

(கொழும்பு)

பதினொரு அரச நிறுவனங்களுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை விநியோகித்த எரிபொருட்களுக்கான 74ஆயிரத்து 075 மில்லியன் ரூபா இதுவரை கிடைக்கவில்லையென கூட்டுத்தாபனத்தின் மீளாய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

இதற்கமைய கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இலங்கை மின்சார சபைக்கு 52 ஆயிரத்து 749மில்லியன் ரூபாவையும் வீதி அபிவிருத்தி அதிகார சபை 662மில்லியன் ரூபாவையும் மகநெகும திட்டம் 236 மில்லியன் ரூபாவையும் மிஹின் லங்கா நிறுவனம் 596மில்லியன் ரூபாவையும் எயார் லங்கா நிறுவனம் 542 மில்லியன் ரூபா வையும் தொடரூந்து திணைக்களம் 22 ஆயிரத்து 72மில்லியன் ரூபாவையும் இலங்கை போக்குவரத்துச் சபை 56 மில்லியன் ரூபாவும் இலங்கை இராணுவம் 3591 மில்லியன் ரூபாவையும் இலங்கை கடற்படை 8974 மில்லியன் ரூபாவையும் இலங்கை விமானப்படை 875 மில்லியன் ரூபாவையும் இலங்கை பொலிஸ் திணைக்களம் 154 மில்லியன் ரூபாவையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது.

இந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் எஜின் உடன்படிக்கையினால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாதது முக்கியமாகும்.

இதேவேளை இந்த முன்னேற்ற மீளாய்வு அறிக்கை மிகவும் குறைபாடுகளுடன் கூடிய அறிக்கையென பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் எஜின் உடன்படிக்கையினால் ஏற்பட்ட இழப் புக்கள் குறித்து இந்த அறிக் கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பெற்றோ லியக் கூட்டுத் தாபனத்தின் இறுதியறிக்கையானது கடந்த 2007ஆம் ஆண்டு வெளியிடப்பட்தாகவும் கடந்த 2008-2009 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு நிறைவைமுன்னிட்டு நடாத்தப்படும் உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு மின்னொளியில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியும் யாழ். பற்றிக்ஸ் கல்லூரியும் இணைந்து மோதவுள்ளன. மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவுள்ளன. (ஸ்ரீ-2-26)

## தொகுதி அமைப்பாளர் நியமனம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளர்கள் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற கட்சிக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில் யாழ்ப்பாண தொகுதி அமைப்பாளராக தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவர் செல்லையா விஜயரட்ணமும் இணை அமைப்பாளராக சோ.சீவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 . 11 . 1925

மறைவு 16 . 10 . 2010



**அமரர் கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்**
**அவர்கள்**

(ஓய்வு பெற்ற அதிபர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உபதலைவர்- சைவ வித்தியா விருத்திச் சங்கம், முன்னாள் தலைவர்- ப.நோ.கூ. சங்கம், சாவகச்சேரி)

இந்து போர்ட் காத்து நின்ற
இமயமே எங்கள் ஐயா
பந்தங்கள் தவிக்க விண்டு
போயினீர் பாவி ஆனோம்
வந்தனை செய்வோம் நாளும்
வானுறை தெய்வப் பாதார
விந்தங்கள் அடைவீர் ஐயா
வீரமா காளி காக்கும்

16.10.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கின் அமரத்துவமெய்திய செய்தி கேட்டு உடன் வந்து ஆவன மேற்கொண்ட அன்பு உள்ளங்கள், நோயுற்றிருந்த வேளை மருத்துவத் தேவைகள் அனைத்தையும் முன்னின்று நிறைவேற்றிய வைத்தியப் பெருந்தகைகள், இறுதி நிகழ்வின் போது நேரில் கலந்து கொண்டும் ஊடகங்கள் வாயிலாகவும் அஞ்சலித்த அன்புள்ளங்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா வீரமாகாளி அன்னையின் குளிர் நிழலில் நித்திய இளைப்பாறுகை பெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அயோத்தியா,
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர் சார்பில்,
ந.நவகுமாரன்(மருமகன்).

(ஸ்ரீ-1624)

# பிரித்தானிய உல்லாசப் பயணிகளை கவர இலங்கை விசேட திட்டம்

(கொழும்பு)

மேற்குலக நாடுகளைச்சேர்ந்த உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் திட்டம் ஒன்றை கடந்த வாரம் இலங்கை அரசு பிரித்தானியாவில் மேற்கொண்டிருந்தது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைககள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றால் அரசு அனைத்துலக சமூகத்தினால் புறக்கணிப்புக்கு உள்ளாகும் நிலையை அடைந்துள்ளது. இதனால் இங்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் மேற்குலக நாட்டவரை கவரும் நடவடிக்கைகளில் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக பிரித்தானியா மக்களை வரவழைப்ப தில் அரசாங்கம் குறியாக உள்ளது.

இது தொடர்பில் பிரித்தானியாவில் உள்ள வேல்ட் ரவல் மார்க்கெட் பகுதியில் கடந்த வாரம் அரசாங்கம் பரப்புரை ஒன்றை மேற்கொண்டிருந்தது.

இலங்கையின் உல்லாசப் பயணத் துறைக்கு இந்தியாவும் பிரித்தானியாவுமே அதிக வருமானத்தை கொடுத்து வருவதகவும் கடந்த வருடம் உல்லாசப் பயணத் துறை 44 விகித அதிகரிப்பை கண்டுள்ளதாகவும் இலங்கை உல்லாசப் பயணத் துறையின் பிரித்தானிய பணிப்பாளர் சஞ்சிகா பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய மக்களின் வரவு 30 விகிதம் அதிகரித்துள்ளதாகவும் இந்த வருட முடிவுக்குள் ஒரு இலட்சம் பிரித்தானிய மக்கள் இங்கு பயணத்தை மேற்கொள்வார்கள் என முன் பதிவுகள் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)




சத்ய சாய் மெடிக்கல் கிளினிக் & பார்மசி
(பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கு முன்பாக)
மருதடி, பிரதான வீதி, பருத்தித்துறை.

தோல் சிகிச்சை (SKIN CLINIC)

21.11.2010 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை தோல் வைத்திய நிபுணரால் பருத்தித்துறை பஸ் டிப்போவிற்கு முன்னால் உள்ள சத்திய சாய் மெடிக்கல் கிளினிக் இல் SKIN CLINIC நடாத்தப்படும் பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :- 0773164251

(2872)

# வெளிநாட்டில் பணிபுரிந்தோருக்கு இலவச மருத்துவ வசதி

(கொழும்பு)

நாடு திரும்பியுள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவனையில் இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கும் இடையே இது சம்பந்தமான ஒரு புரிந் துணர்வு ஒப்பந்தம் இருந்து வந்தது. இப்போது அது புதுப்பிக்கப்பட்டிருக் கின்றது.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வெளிநாட்டுத் தொழிலாளர்கள் பணியகத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்பதுடன் அதற்கான கட்டணங்களையும் பணியகமே செலுத்தவுள்ளது என்றார்.

சஹன பியஸ என்னும் நலன்புரி நிலையத்தின் பணியகம் சீதுவையில் அமைத்துள்ளது. இதன் மூலமும் மருத்துவ வசதிகள் வழங்கப்படுவதுடன் வெளிநாடுகளில் இருந்து திரும்பியவுடன் தற்காலிக ஓய்வு பெற்றுக் கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இங்கிருந்து வெளிநாடு செல்வோருக்கும் சஹன பியஸ உதவுகின்றது. (ஸ்ரீ-2)

# அடுத்த மாதம் ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் டிசம்பர் மாதம் லண்டனுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் உரையாற்ற உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்ய மாட்டார் என சில ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டிருந்ததாக பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ் தானிகர் நீதவான் நிஹால் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் பிரித்தானிய கருத்துக்களை வெளியிட்ட போதிலும் ஆதாரங்கள் எதனையும் வெளியிடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வரவு-செலவுத்திட்டம் மற்றும் இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாண நிகழ்வுகளில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்தி வருவதாகவும் இதனால் பிரித்தானியவிற்கு விஜயம் செய்யவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரான நீரஜி தலைமையில் இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மூத்த துறவியான ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரான நீரஜி மகராஜ் இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் தரவுள்ளார்.

இவரின் தலைமையின் கீழ் வடமராட்சி கிழக்குப் பகுதிகளான மாமுனை மற்றும் உடுத்துறைப் பகுதிகளில் நாளையும் நாளை மறுதினமும் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் தங்கியுள்ள ஆண், பெண் இருபாலாருக்கும் அன்றைய தினம் ஆசீர்வாதம் வழங்கவுள்ளார் என யாழ். கொக்குவில் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் சித்தியடைந்த யா/ அல்வாய்
சின்னத்தம்பி வித்தியாலய மாணவர்களான


செல்வன் யோகராசா ரஜீவன் (160)


செல்வன் சரவணன் அபிராம் (155)


செல்வன் சதீஸ்குமார் தர்சிகன் (144)


செல்வி நாகராசா சுமாலினி (142)

**ஆகியோரையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான**

செல்வி.த.டிலக்ஷனா (135) செல்வி.ம.ஆசிகா (117)
செல்வி.உ.மிதுர்சா (125) செல்வன்.சி.சிவகரன் (114)
செல்வி.க.சங்கீதா (122) செல்வன். வெ.ஆர்த்திகன் (109)

ஆகியோரையும் மேலும் பல சிறப்புக்கள் பெற வாழ்த்துவதுடன் இவர்களை வழிநடத்திய அதிபர், தரம் - 5 இல் கல்வியறிவூட்டிய ஆசிரியை திருமதி வாசுகி நித்தியானந்தன், ஆரம்பக்கல்வி ஆசிரியைகள், கரிசனை செலுத்திய பெற்றோர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.

யா/அல்வாய் சின்னத்தம்பி
வித்தியாலயம்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

வாழ்த்துவோர்:-
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி/1627)


# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்டச் செயலகம், சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் என்பவற்றிற்கான

## வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2011

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகங்களிற்கும்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தகாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2011ஆம் ஆண்டுக்கான பொருட்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளை, சகல பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் 15.11.2010 தொடக்கம் 25.12.2010 வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையின் (9" X 4") இடது பக்க மேல் மூலையில் "**வழங்கல்கள் / சேவைகள் பதிவு செய்தல் - 2011**" எனக்குறிப்பிட்டு தபாலில் அனுப்புவதாயின் "**அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**" என்னும் முகவரிக்கும் நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையிலும் 27.12.2010 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும்.

### வழங்கல்கள்

1. காகிதாதிகள், எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள்.
2. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு).
3. கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் /போட்டோக் கொப்பி இயந்திரங்கள் / தொலைபேசிகள் / தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள் /இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக தளபாடங்கள்.
4. இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்.
5. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள்.
6. மின்சாரப் பொருட்களும், அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும்.
7. கட்டிட, இரும்புப் பொருட்கள், தீந்தை, வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்களும்.
8. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள்.
9. கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மாபிள் அசிட், குளோறின், எயார் பிறஷ்னர்கள் (Air Fresher)
10. நீர் இறைக்கும் மோட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்களான பைப், பென்ட், சொக்கற் வகைகள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், டியூப்புகள், பற்றரிகள்
12. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களான கதிரை, மேசை போன்ற பொருட்கள்.
13. பால்மா வகைகளும், பிளாஸ்ரிக் குவளை வகைகளும் (Nescafe premix, Nestea & Disposal Cubs,Ect)
14. கட்டிட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
15. தோல்வகை உற்பத்திப்பொருட்கள்.
16. விளையாட்டுப் பொருட்களும் அதனுடன் தொடர்புடைய பொருட்களும்.
17. கல்e மண் வகைகள்e உற்பத்தி செய்யப்பட்ட கட்டிடப் பொருட்கள்.
18. உலர் மின்கலப் பொருள் வகைகள்.

### சேவைகள்/ திருத்தங்கள்

01. கட்டிட நிர்மாணம் மற்றும் கட்டிட வேலைகள் மற்றும் சேவைகள். (Services)
02. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/ சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள் (Services)
03. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புக்கள், திகதி ஸ்ராம்புக்கள்.
04. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகளும், பராமரிப்புகளும் (கணனிகள், கல்குலேற்றர்கள்/ றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக்கொப்பி இயந்திரங்கள்/ தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள் போன்றன)
05. குளிர்சாதனப் பெட்டிகள், எயார்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
06. மர, உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
07. பெயர் பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் (3D உட்பட) செய்தலும்.
08. உள்ளகத் தொலைபேசி திருத்த வேலைகளும் பராமரிப்புகளும் (Services)
09. மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள் முறுக்குதலும் (Winding)
10. மின்சார வயறிங் வேலைகள், கணணி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்.
11. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.

### பதிவு தொடர்பானவை

மாவட்டச் செயலகத்தில் பொருட்கள், சேவைகள் தொடர்பாக பதிவுகளை மேற்கொள்பவர்களிடம் இருந்தே 2011 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங்களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருட்கள் சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில் / பிரதேச செயலகத்தில்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பத்தினைப் பெற்று பதிவுகள் மேற்கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலரும் அரசாங்க அதிபரும்,
மாவட்டசெயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-1626)



யா/ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) சி.நந்தகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் ஆசிரியர்கள் ஆசிரிய கீதத்தை இசைக்கும்போது அனைவரும் எழுந்து நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

# பிரதேசசபை, நகரசபைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேசசபை மற்றும் நகரசபை அலுவலகங்களில் இருந்து பல உத்தியோகத்தர்கள் வன்னிப் பகுதிக்கும், மாகாண சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த அலுவலகங்களில் நீண்ட காலம் பணியாற்றிய முகாமைத்துவ உதவியாளர்கள்,தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மற்றும் சில உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ளூர் இடமாற்றம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-10)




# பருவகால மழையையடுத்து டெங்குநோய் பரவும் அபாயம்!

## சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச பகுதியில் பொது மக்கள் சுகாதாரத்தைப் பேணி டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உதவுமாறு சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மீண்டும் இரவு பகலாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

தற்போது பருவகால மழை ஆரம்பித்திருப்பதை அடுத்து டெங்கு நோய் பரவலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.எனவே மக்கள் சுகாதாரத்தைப் பேணுமாறு ஒலிபெருக்கி மூலம் கோரிக்கை விடப்படுகின்றது.

வீடுகள், வீதிகளில் குப்பைகள், கழிவுப் பொருட்கள், தகரங்கள் மற்றும் கற்கள், மண்கள் என்பவற்றை தேக்கி வைக்க வேண்டாம் என்றும் சுகாதார நடவடிக்கைகளை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-10)

# நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

கலாநிதி மனோன்மணி சண்முகதாசின் வழிகாட்டலின் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ''பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்'' என்ற கருத்தரங்குத் தொடரில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுக விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் நிகழ்த்தவுள்ளார். ஆசியுரை களை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நீர்வேலி செல்லக் கதிர்காம தேவஸ்தான பிரதம குரு நீர்வைமணி கு.தியாகராஜக்குருக்கள் ஆகியோரும் வாழ்த்துரைகளை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

நூலின் அறிமுகவுரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் க. இரகுபரனும் நயப்புரையை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனும் நிறைவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் வழங்குவர்.

இந்நூல் உயர் கல்வி மாணவரை மையப்படுத்தி ஆக்கப்பட்டதென்பதும் அதனை கலாநிதி மானோன்மணி சண்முக தாஸ், கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் ஆகியோர் தொகுப்பாக்கம் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் சம்பியன்

(கரவெட்டி)



கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தி னால் நடத்தப்பட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று மணற்காடு சென் அன்ரனிஸ் அணி சம்பியனாகியது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4மணிக்கு சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியின் முதலாவது அரையிறுதிப்போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணியை 4:0 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணியும் மற்றும் ஒரு அரையிறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர் அணியை பனால்டி உதைமூலம் வதிரி டயமன்ஸ் அணியும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

ஆட்டம் ஆரம்பமான முதலே இரு அணிகளும் உற்சாகமாக விளையாடி இடைவேளை வரை கோல்கள் எதையும் போட முடியாமல் போனது.

இடைவேளையின் பின் தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் 47 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் வீரர் அரவிந்தன் தனது அணிக்காக ஒரு கோலைப் போட்டார்.

50 ஆவது நிமிடத்தில் சென் அன்ரனிஸ் வீரர் கோல் ஒன்றைப் போட்டு போட்டியை சமப்படுத்தினார்.

வெற்றியைத் தீர்மானிக்க பனால்டி உதை வழங்கப்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென் அன்ரனிஸ் அணி வெற்றிபெற்று சம்பனினாகியது. (ஸ்ரீ-24)

# கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்வருடம் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இச் சங்க மண்டபத்தில் சங்கத்தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி மற்றும் பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ. சங்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ. தர்சினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி காலங்களில் தொடர்ந்து ஆறு நாட்களும் தொடர் சொற்பொழிவாற்றிய ஆன்மீக சொற்பொழிவாளர் பொன்.சுகந்தன் கடந்த 12ஆம் திகதி சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் ப.மனோகரக் குருக்களால் கௌரவிக்கப்பட்டார். (ஸ்ரீ-2)

# நீர் வழிந்தோடக்கூடியவாறு வடிகால்கள் மதகுகள் அமைக்கப்படல் வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(அச்சுவேலி)

யாழ்.பருத்தித்துறை வீதி, அகலிப்பு வேலைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளது. ஆனால் அதன் ஊடாக செல்லும் மதகுகள் நீர்வழிந்தோடக்கூடிய வகையில் இன்னமும் இணைக்கப்படவில்லை.

குறிப்பாக அச்சுவேலிக்கும் பருத்தித்துறைக்கும் பிரிந்து செல்கின்ற ஆவரங்கால் சந்திப் பகுதியில் மிகவும் பெரிய வெள்ள வாய்க்கால் ஒன்று வீதிக்கு அருகில் இருந்தது.

அது வீதி அகலிப்புக்காக தூர்வை செய்யப்பட்டுள்ளது. எனினும் நீர்வழிந்து செல்லக் கூடிய விதத்தில் மதகுடன் இணைக்கப்படவில்லை.

எனவே பருவகால மழையினால் கழிவு வாய்க்கால் நிறைந்து குடியிருப்புக்கள், பயிர்ச் செய்கை நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால் உரிய அமைப்புக்கள் விரைந்து செயற்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-70)

# வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை

(சில்லாலை)

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான சில்லாலை பிரதான வீதியிலுள்ள மூன்றாம் வீதியானது புனரமைக்கப்படாமல் உள்ளது.

தற்போது இவ் வீதியானது குன்றும் குழியுமாக, பொதுமக்கள் பிரயாணம் செய்யமுடியாது காணப்படுகிறது.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ் வீதியானது கடந்த 1987 ஆம் ஆண்டிற்குப் பின்னர் செப்பனிடப்படாது இற்றை வரையிலும் காணப்படுகின்றது. அத்துடன் வீதி சீரின்மையால் கடந்த 1992 ஆம் ஆண்டிற்குப் பின் இப் பாதை வழியாக பேருந்துசேவைகள் இடம் பெறுவதில்லை.

இது தொடர்பாக அப்பகுதி வாழ் மக்கள் உயர் அதிகாரிகளிடம் தொடர்புகொண்ட போதும் பயனளிக்கவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கவனமெடுத்து வீதியை செப்பனிட்டுத் தருமாறு அப்பகுதி வாழ் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-58)

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 21.11.2010 தொடக்கம் 07.05.2011 வரை




(உத்தராடம் 2, 3, 4 ஆம் திருவோணம், அவிட்டம் 1, 2 பாதம்)

**உடன் பிறப்பின் உதவி வரும்! உழைப்பிற்கு பலன் கிடைக் கும்!**

**சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப் பெற்ற மகர ராசி நேயர்களே!**

இது வரை கும்பத்திற்கும், மீனத்திற்குமாக உருட்டி விளையாடும் பந்து போல, சஞ்சரித்து வந்த குரு இப்பொழுது, முறையாக எதிர்வரும் 21 ஆம் திகதி மீன ராசிக்குச்செல்கிறது. வந்த குருவால் வளர்ச்சி எப்படியிருக்கும்? என்ற சிந்தனை, பெயர்ச்சிக்கு முன்னதாகவே உங்கள் மனதில் இடம் பிடிக்கும். வாழ்க்கை சக்கரத்தை நாம் ஓட்டுவதற்கு வழி காட்டும் நவக்கிரகங்களில் குரு ஒன்று தான் சுபகிரகமாகும்.

நல்லாரை காண்பதுவும் நன்றே! நல்லாரோடு இருப்பதுவும் நன்றே! என்று சான்றோர்கள் சொல்வார்கள். அப்படிப்பட்ட நல்லவர்களை நமக்கு அறி முகம் செய்து வைத்து, நல்ல வாய்ப்புகளை இல்லம் தேடி வரவழைத்துக் கொடுப்பது குருவின் ஆதிக்கத்தில் தான் இருக்கிறது.

அந்த குரு உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்திற்கும், பன்னிரெண்டாமிடத்திற்கும் அதிபதி யாவார். விரயாதிபதியின் ஆதிபத்தியத்தைப் பெற்ற குரு உங்கள் இராசியைப் பொறுத்த வரை – பலம் பெறும் பொழுது விரயத்தை அல்லவா? செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். அதே நேரத்தில் அந்த குரு உங்கள் சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியாகிறார். எனவே, எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டியதும் இந்த குருவின் கையில் தான் இருக்கிறது.

மொத்தத்தில் சொல்லப்போனால், இந்த குரு பெயர்ச்சி பணப்புழக்கத்தை அதிகரிக்க வைக்கும். அதே நேரத்தில், அதைப்போல ஒரு மடங்கு கூடுதலாக செலவையும் ஏற்படுத்தலாம். எனவே, தேவையான காரியங்களை தேவையான நேரத்தில் செய்து முடிக்க கற்றுக் கொள்ளுங்கள். குறிப்பாக, வாகனம் பழுதாகி விட்டால், அதை சரிசெய்ய செலவு வருமே என்று நினைத்து, அப்படியே கொஞ்ச நாள் ஓடலாம் என்றிருக்கக் கூடாது. அதற்காக நீங்கள் செலவிட வேண்டிய தொகை, வேறு ஒரு ரூபத்தில் செலவாகி விடலாம். அதுவும் வாராத கடனாகவோ, வீண் விரயமாகவோ மாறலாம். எனவே, பொருளாதார நிலை உயரும் பொழுது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள். வேண்டிய ஆடை, ஆபரணங்களை வாங்கி சேர்த்து கொள்ளுங்கள்.

குரு பார்க்கும் இடங்களாக கருதப்படும் 7, 9, 11 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. களத்திர ஸ்தானம், தகப்பனார் ஸ்தானம், இலாப ஸ்தானம் ஆகியவற்றில் குருவின் பார்வை பதிவதால், அந்தந்த இடங்களுக்குரிய முயற்சிகள் நடைபெறுவதில் ஏற்பட்ட தடைகள் நீங்கும்

குரு உங்கள் ராசியை பார்க்கவில்லை என்றாலும், உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார் அல்லவா? குருவின் 5, 7, 9 ஆகிய பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடையும் என்பது சாஸ்திர நியதி. அந்த குரு எந்த இடத்தில் இருந்து கொண்டு பார்க்கிறதோ, அந்த இடத்திற்குரிய ஆதிபத்ய பலன்களையும் தன் பார்வை மூலம் சேர்த்து வழங்கும்.

சுமார் ஐந்தரை மாதங்கள் மட்டுமே மீனத்தில் சஞ்சரிக்கும் இந்த குரு–உங்களுடைய சகோதர ஸ்தானம், சகாய ஸ்தானம் எனப்படும் மூன்றாமிடத்தில் சஞ்சரிப்பதால், மூத்த சகோதரத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். அவர்கள் வழியே ஏற்படும் சுப நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் உதவிக்கரம் நீட்டுவீர்கள். மூன்றில் இருக்கும் குரு சப்தம ஸ்தானத்தைப் பார்ப்பதால். உடன் பிறப்புகளின் திருமண முயற்சி வெற்றி பெறும்.

இல்லத்தில் சுபகாரிய பேச்சுக்கள் வந்து கொண்டேயிருக்கும். தொழில் கூட்டாளிகளாக கூடப்பிறந்தவர்களே மாறலாம். வியாழன் தோறும் விரதமிருந்து குரு தெட்சிணா மூர்த்தியை வழிபட்டு வருவதன் மூலம் வியக்கும் அளவு உங்கள் வாழ்க்கையை அமைந்துக் கொள்ளலாம்.

**நீங்கள் தளராத மனதிற்கு சொந்தக்காரர்கள்!**

மக்கள் உங்களை தளராத மனமும், தாராளக் குணமும் கொண்டவர்கள் என்று வர்ணிப்பர். ஆனால், சிக்கனத்தின் சிகரமாகவும் சில சமயங்களில் விளங்குவீர்கள். எதையும் ஒரு முறைக்கு இருமுறை கேட்டுச் செய்வது உங்கள் பழக்கம். தோற்றத்தை வைத்து உங்களை எடைபோட முடியாது. நிதானத்தைக் கடைபிடிப்பதன் மூலமே நிம்மதியைக் காணலாம் என்றுரைப்பீர்கள்.

இராசிநாதனாக சனி விளங்குகிறார். எனவே, தாமத விவாகமே உங்கள் தாரதோஷ நிவர்த்திக்கு வழி வகுக்கிறது. தகுந்த வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்கிறது. பிடிவாத குணம் உங்களுக்கு கொஞ்சம் அதிகம் தான். மற்றவர்களின் பிரச்சினை களை அலசி ஆராய்ந்து கேட்பதில் ஆர்வம் காட்டும் நீங்கள் உங்களைப் பற்றிய பிரச்சினைகளை ஒருவரிடமும் சொல்லமாட்டீர்கள். இப்படிபட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களை வழங்கப்போகிறது என்பதை பற்றி பார்ப்போம்.

***மூன்றினில் குருதான் வந்தால், முன்னேற்றம் அதிகரிக்கும்! தூண்டிலில் கிடைத்த மீன்போல, தொகைவந்து சேரும் உண்மை, வேண்டிய காரியங்கள் விருப்பம் போல நடப்பதற்கே, வான்வெளி குருவை நீங்கள் வணங் குவீர்! வியாழன் தோறும்!***

என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வழிபாடு உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும். எழிலான வாழ்க்கை அமைய இல்லத்தில் வியாழன்தோறும் விரதமிருப்பது நல்லது. அயல் நாட்டு அனுகூலம் கிட்டும். நீங்கள் கேட்ட உதவிகளை செய்து கொடுப்பர். தொழிலில் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது.

**விருப்பங்களை நிறைவேற்றும் வியாழனின் பார்வை!**

குருவின் பார்வைதான் குழப்பங்களை அகற்றும். குதூ கலத்தை வழங்கும். இழப்புகளை ஈடுசெய்யும். இனிய வாழ்க்கையை மலரச் செய்யும். அந்த பார்வை சகோதர ஸ்தானத்தில்இருந்து உங்களுக்கு கிடைக்கிறது. எனவே, சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர். உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்திணைவர்.

பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பஞ்சாயத்துக்கள் பலமுறை வைத்தும், பங்கெடுத்துக் கொள்ளாத சகோதரர்கள் இப்பொழுது, முன்நின்று முறையாக பிரித்துக் கொடுப்பார். சென்ற சில வருடங்களாக சகோதர கூட்டில் இருந்த தொழில், சமரச பேச்சு வார்த்தையின் அடிப்படையில் இப்பொழுது தனித்தொழிலாக அமையும்.

குருவின் பார்வை சப்தம ஸ்தானத்தில் பதிவதால் வரன்கள் வாயில் தேடி வந்து கொண்டேயிருக்கும். வாழ்க்கைத்துணை வழியே வரவும் வந்து சேரும். குடும்பத்தினர்களிடையே ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கணவன் – மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் மாறும். பெண்வழி ஒத் துழைப்புகள் மற்றும் தீர்த்த யாத்திரைகள் திருப்திகரமாக அமையும்.

குருவின் பார்வை ஒன்பதில் பதிவதால், பெற்றோர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். தந்தை வழியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிந்தை மயங்காமல் இனி சிரித்து மகிழ வாய்ப்பு கிட்டும். பங்காளிப் பகை மாறும். அருளாலர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் பொருள் வளத்தைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும்.

மக்களிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். வாகன மாற்றம் செய்ய முன்வரும் நேரமிது. புதிய வாகனங்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். பழைய சொத்துகளை விற்று புதிய சொத்துகளை வாங்குவீர்கள். அரை குறையாக இருந்த பணிகள் மீண்டும் தொடரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

குருவின் பார்வை இலாப ஸ்தானத்தில் பதிவதால், பணவரவு திருப்தி தரும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். பல ஆண்டுகளாக வசூலாகாத பாக்கிகள் இப்பொழுது வசூலாகலாம். தேக நலன் சீராக அமையும். தெய்வ வழிபாடு உங்களுக்கு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

தொழில் தொடங்க போதுமான வசதியில்லையே என்று நினைத்தவர்களுக்கு அரசு வழி ஒத்துழைப்பும், அருகில் இருக்கும் வங்கியின் ஒத்துழைப்பும் கிடைக்கலாம். பங்குதாரர்கள் தானாக வந்திணைவர். ஆனால், விரயாதிபதியாகவும் குரு விளங்குவதால், ஜாதக பொருத்தம் பார்த்தே தொழில் பங்குதாரர்களையும் சேர்த்துக்கொள்வது நல்லது.

ராகு–கேது பெயர்ச்சிக்குப் பின்னர் வரும் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொண்டால் கொண்டால் வளர்ச்சி எதிர்பார்த்தபடியே அமையும். இந்த குருப்பெயர்ச்சியைப் பொருத்த வரை அது பார்வை பலத்தால் பலன். கொடுக்கும் பெயர்ச்சியாகவே அமைகிறது.

**சிவல்புரி சிங்காரம்**

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

மூன்றாமிடத்து குருவால் முன்னேற்றங்கள் அதிகரிக்க கொற்றவாளீஸ்வரர், அம்மன் மற்றும் குரு. வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**மகர ராசிப் பெண்களுக்கு மதிப்பும், மரியாதையும் உயரும்!**

மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி மனக்குழப்பங்களை அகற்றும் பெயர்ச்சியாக அமையப்போகிறது. பணப்புழக்கம் அதிகரிக்கும். எனவே, சிக்கனத்தைக் கடைப்பிடித்த நீங்கள் இனி தாராளமாக செலவிட்டு மகிழ்வீர்கள். கல்யாண கனவுகள் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். சகோதர வழி ஒத்துழைப்பு கிடைக்கும். கூடப்பிறந்தவர்களின் கோபம் நீங்கும். குரு உத்தரட்டாதி நட்சத்திர காலில் சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டுவது நல்லது. கணவன்–மனைவியரிடையே விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் வெற்றியை வரவழைத்துக் கொள்ளலாம். கேது–ராகு ப்ரீதி செய்வதன் மூலம் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

(தொடரும்)






யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அ.அகிலதாஸ், பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட சமூகப் புரவலர் மா. சுப்பிரமணியம், நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் கௌரவ விருந்தினராக கலந்துகொண்ட திருமதி மாலதி சுப்பிரமணியம் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# யாழ்ப்பாணத்தில் அரைவாய்மொழிப் பாடல்கள்

04

**கடந்த செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ்த்துறை கருத்தரங்கில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

*"முற்றவெளி பறங்கித் தெரு கோட்டடி*
*முற்றுஞ் சனங்களால் மூடியிருந்தது*
*பத்துநாள் மட்டும் விளக்கம் நடந்தது*
*பாராத நூதனம் பாருமடி"*
*"பட்டியிற் செம்மறியாடு நரிக்குப்*
*பயந்து குனிந்து தலையைப் பதுங்கல் போற்*
*கிட்ட விருந்த தரணி யொருத்தர்*
*கெடிமண்ட வில்லையோ கேளுமடி"*

இவ்வாறு பாடப்பட்ட பாடல்களைக் கொண்ட நூல்களைப் பெறுவது இன்று மிகக் கடினமானது. மேற்படி பாடல், கல்லடி வேலுப் பிள்ளையாற் பாடப்பட்டது என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து அரசியல் சமூக பொருளாதார, பண்பாட்டுக் கூறுகளையும், வரலாற்றுச் செய்திகளையும் கூறும் கும்மிப்பாடலான உத்தியோகர் லக்ஷணக் கும்மியிலே இடம்பெறும் பிரபல கோட்டு வழக்கு ஒன்றை இவ்விடத்திலே சுட்டிக் காட்டுவது நலம்.

19 ஆம் நூற்றாண்டிலே நடைபெற்ற பொய் மரண சாதன வழக்குப் பற்றிய பல விபரங்களை இக் கும்மிப்பாடலினூடு காண முடிகின்றது.

*"குருக்கள்மார் பட்டசத்தி லாதனத்துக்காகக்*
*கூல் அப்புக்காத்துத் தொடுத்த பொய்ச் சாதன*
*வழக்குப்போல் முன்னுமறிந்த துண்டோ வந்த*
*வழுவைநீ பார்பின்னே ஞானப் பெண்ணே!*
*கூல் அப்புக்காத்து குழப்பத்தின் மேலே*
*கொழும்பில் இருக்கும் சனங்கன் சகலரும்*
*பேர்பெற்ற கள்ளர்தான் யாழ்ப்பாணத்தா ரென்று*
*பேசுகிறாரெடி ஞானப் பெண்ணே!*
*மானம் மருங்கு பணங்களும் போய்ச்சுது*
*மறிய லிருக்கத் தலையில் விதியாச்சு*
*ஈனமல்லோ வேழைப் பார்ப்பார் பணத்துக்*
*கிவராசைப் பட்டது ஞானப் பெண்ணே!"*

இத்தகைய பாடல்கள் பல இன்றும் யாழ்ப்பாணத்தில் வாய்மொழியாக வழங்கி வருகின்றன. சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இக் கும்மிப் பாடல்கள் சிலவற்றை முதியவர்கள் கூறுவதை இக்கட்டுரை ஆசிரியர் நேரடியாகவே கேட்டுள்ளார் (1978 - 1979)

உத்தியோகர் லக்ஷணக் கும்மியைப் பாடியவரின் பெயரை அறிய முடியவில்லை. ஆனால், கொக்குவில் கிழக்கு M.S. துரை என்பவர் 1936 ஆம் ஆண்டு சோதிடப்பிரகாச யந்திரசாலையில் இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டுள்ளார். யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல்வேறு வகையான அம்சங்களையும், இந் நூலினூடு கண்டுகொள்ளலாம். இந்நூல் பற்றி ஏலவே எம்மால் ஒரு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

19 ஆம் நூற்றாண்டிலே வேகமாகப் பரவிய கொலரா என்னும் நோய் பற்றியும் அரை வாய்மொழிப் பாடல்கள் பல தோன்றின என அறிய முடிகின்றது. கொலராவைக் கொள்ளைநோய் என்றும் கோதாரிக் கழிச்சல் என்றும் அழைத்தனர். கோதாரிக் கழிச்சல் கும்மி என்று ஒரு நூலைத் தாம் படித்ததாக முதியவர் ஒருவர் என்னிடம் கூறினார். (தகவல் அ.கு.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை 1984)

யாழ்ப்பாணப் பகுதியிலே வெய்யிற் காலங்களில் சிரங்கு என்னும் தோல் நோய் ஏற்படுவது வழக்கம். சிரங்கு பற்றியும் பல அரை வாய்மொழிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. வகைமாதிரிக்கு இன்றும் யாழ்ப்பாணப் பகுதியில் வழங்கிவரும் சிரங்கு பற்றிய பாடல் ஒன்றைக் காட்டுவோம்.

*"சிரங்கப்பனாரே - குஷ்ட*
*ராஜன் பெற்ற செல்வக் குபேரா*
*அகங்கைக்கும் புறங்கைக்கும்*
*அழகான முழங்கைக்கும்*
*சொறியச் சொறிய - நல்ல*
*சுகத்தை தந்தாயே - சிரங்கப்பனாரே"*

இப்பாடலை நாடகக் கவிமணி M.V. கிருஷ்ணாழ்வார் இயற்றினார் என்று கூறப்படுகிறது. கிருஷ்ணாழ்வார் சிறந்த கவிஞராக, குறிப்பாகச் சரமகவி பாடுவதில் வல்லுநராகத் திகழ்ந்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

மலேரியா, சின்னமுத்து, கொப்புளிப்பான் முதலான நோய்கள் பற்றியும் அரை வாய்மொழிப்பாடல்கள் பல இப்பிரதேசத்திலே தோன்றி மறைந்தன என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

### சமூக சீர்திருத்தம்


சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தும் வகையிலே யாழ்ப்பாணப் பிர்தேசத்திற் பல அரை வாய்மொழிப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன. சிறப்பாக மதுவிலக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பாடு பொருளாக அரைவாய்மொழிப் பாடல்களிலே வழங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மக்கள் கூடுமிடங்களான திருவிழாக்கள், சந்தை, கடைத்தெரு முதலான இடங்களிலே, பிரசார நோக்கிலே மதுவிலக்குப் பற்றிய பாடல்கள் பாடப்பட்டன எனக் கூறப்படுகின்றது.

வடமராட்சிப் பகுதியில் இன்றும் வழங்கி வரும் அரைவாய் மொழிப் பாடலொன்றை இவ்விடத்திலே சுட்டிக்காட்டலாம்.

*"சோக்கான தென்னங்கள்ளு*
*சொக்கவைக்கும் எந்தன் கள்ளு*
*சோதிச்சுக் குடிச்சுப் பாக்க*
*வாருங்கோ நயினார் - உங்களைச்*
*சூறையாட்டி விழுத்தா விட்டால்*
*கேளுங்கோ நயினார்"*

இப்பாடல் நாடகக் கவிமணி M.V. கிருஷ்ணாழ்வார் இயற்றினார் என்று கூறப்படுகின்றது. (தகவல்-மன்னவன் கந்தப்பு) இப்பாடல், பெரும்பாலும் நாடக மேடைகளில் இடைப்பிறவரலாகப் பாடப்பட்டுக் கையளிக்கப்பட்டதாகும். நாடக விளம்பர நோட்டீசுகளின் மறுபக்கத்தில் மக்கள் விரும்பிக் கேட்கும் பாடல்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுவதும் உண்டு. அரைவாய் மொழிப் பாடல்களின் நிலைபேற்றிற்கு நாடக மேடைகளும் களனாக அமைந்தன எனக் கருதலாம்.



கள்ளு, சமூகத்தைச் சீரழிப்பதனால் உண்டாகும் தீமைகளைப் பல, பா வடிவங்களிலே பாடிய அரை வாய்மொழிப் பாடற் புலவர்கள், கள்ளுக்குப் பஞ்ச புராணமும் பாடியுள்ளனர்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**

நையாண்டி கலந்து, நகைச்சுவையாய் அமைந்த இந்தப் பாடல்கள், அச்சிட்டு வெளிவந்ததாகத் தெரியவில்லை. ஆனால், வடமராட்சிப் பகுதியில் இன்றும் வாய் மொழியாக வழங்கி வருகின்றது. முதியவர் ஒருவர் தம் நினைவிலிருந்து பாடிக்காட்டிய பாடலொன்றைச் சுட்டிக்காட்டலாம் என்று எண்ணுகின்றேன். இப்பாடலை என்னிடம் கூறியவர், பாடலுக்கான தலைப்பு -'கள்ளுக் கடவுள்' என்று கூறினார். இவர், கள்ளுக்கடவுள் பற்றிய பாடப்பட்ட பஞ்ச புராணத்தில் இரண்டு பாடல்களை என்னிடம் கூறினார்.

(தொடரும்)



மறுபாதி கவிதைக்கான காலாண்டிதழ் முதலாம் ஆண்டு சிறப்பிதழ் நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஐ.சாந்தன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கலைமுகம் இதழின் பொறுப்பாசிரியர் கி.செல்மர் எமில் ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதி வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்துக்கு 11 ஆயிரம் பேர் பாதுகாப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்துக்கு பாதுகாப்பு வழங்க 11 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இராணுவத்தினரைக் கொண்ட மிகவும் பலம்வாய்ந்த அணியொன்று எதிர்வரும் 19ஆம் திகதி இடம் பெறுகின்ற இவ் வைபவத்துக்கு பாதுகாப்பு வழங்கவுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதவியேற்பு வைபவத்தின்போது மழை வெள்ளம் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்கும் வகையில் வேண்டிய முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# குறுங்காலத்தில் நீதிமன்ற வழக்குகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

குறுங்காலத்தில் நீதிமன்ற வழக்குகளை நிறைவு செய்வதற்காக தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் அதாவுட செனவிரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

புதிய நீதிமன்றங்களை உருவாக்குவதுடன், நீதிபதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவதன் ஊடாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையில், நீதிமன்ற நீதியரசர்களுக்கு டிப்ளோமா பட்டம் ஒன்றை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குன்றும் குழியுமாக உள்ள வீதியால் பயணிக்க முடியாத நிலை!

## மக்கள் பெரும் அசௌகரியம்

(பருத்தித்துறை)

வல்வைச் சந்தியில் இருந்து அச்சுவேலிச் சந்திவரையில் உள்ளவீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இதனூடாக போக்குவரத்துச் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

இவ்வீதி மழை காலத்துக்கு முன்னரே சேதமடைந்திருந்தது.

எனினும் தற்போது பெய்துவரும் பருவகால மழையை அடுத்து பெரும் சேதமடைந்து காணப்படுகிறது.

எனவே இதனூடாகச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளானதுடன் வாகனங்களின் உதிரிப்பாகங்களும் சேதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி ஊடாக தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்களும் பொதுமக்களும் பயணம் செய்கின்ற பிரதான வீதியாக இருக்கின்றபோதிலும் இவ்வீதி திருத்தப்படாமல் இருப்பதனால் பயணிகள் கவலை அடைகின்றனர். இவ்வீதியைத் திருத்துவதற்கு கற்கள் பறிக்கப்பட்டு பல நாட்களாகியும் வீதி திருத் தப்படாமல் உள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை உடன் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள், வாகன ஓட்டு நர்கள் எனப் பலரும் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-10)

# மகம்புர துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் ஆரம்பம்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகம்புரதுறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கிணங்க அடுத்த மாதம் மூன்று கப்பல்கள் இந்ததுறைமுகத்திற்கு வரவுள்ளதாக துறைமுகத் துறை அமைச்சர் தயாசிரித்த திசேரா தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல்கள் உர வகைகளை இலங்கைக்கு கொண்டு வரவுள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து இந்தக்கப்பல்கள் தொடர்ச்சியாக உர வகைகளை ஏற்றிக்கொண்டு மகம்புர துறைமுகத்திற்கு வரவுள்ளதாக அவர் கூறினார்.

இது தவிர நான்கு சீமெந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் துறைமுகத்தை அண்டியுள்ள பிரதேசங்களில் தமது தொழிற்சாலைகளை அமைக்க விருப்பம் தெரிவித்துள்ளது. இந்த நிறுவனங்கள் சீமெந்தை தொகையாக இலங்கைக்கு கொண்டு வந்து அவற்றை தொழிற்சாலைகளில் பொதி செய்ய திட்டமிட்டுள்ளன.

அவர்களின் இந்த நடவடிக்கைகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதேவேளை உத்தியோக பூர்வமாக முதலாவது வர்த்தக கப்பல் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 10.30 மணிக்கு துறை முகத்தினுள் நுழையவுள்ளதாகவும் அமைச்சர் தயாசிரித்த திசேரா தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அடுத்தவருடம் முதல் க.பொ.த. உயர்தரத்தில் தொழில்நுட்பப் பிரிவு உள்ளடக்கப்படும்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

அடுத்த வருடம் முதல் கல்விப் பொதுத்தராதர உயர் தரத்தில் தொழில் நுட்பப் பிரிவு ஒன்று உள்ளடக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி கட்டுபெத்த ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மோட்டார் வாகன தொழில் நுட்பவியலாளர்களுக்கான தேவை வருடத்திற்கு 10 ஆயிரமாகக் காணப்படுகிறது. என இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

ஆயினும் வருடத்திற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர்கள் 2 ஆயிரம் பேரைக் கூட நம் நாட்டிலுள்ள தொழில்நுட்ப நிறுவணங்களினால் உருவாக்க முடியாமல் உள்ளது.

இலங்கயிலுள்ள பல்கலைக் கழகங்களின் 4 பொறியியல் பீடங்களின் மூலமாக ஆயிரத்து 300 பொறியியலாளர்களை மாத்திரமே உருவாக்க முடிகின்றது. இது தவிர நடுத்தர மட்ட பொறியியலாளர்களை உருவாக்குவது அதை விடவும் குறைவாகவே உள்ளது.

ஏற்றுக்கொள்ளத்தக்க சம்பிரதாய முறைமைகளுக்கமைய ஒரு பொறியியலாளருக்கு 4 நடுத்தரமட்ட பொறியியலாளர்களும் 20 தொழில் நுட்பவியலாளர்களும் காணப்பட வேண்டும் எனவே மாணவர்கள் இத்துறையில் தமது கல்வியினை மேற்கொள்ள அக்கறை செலுத்த வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

# உலக உணவுத் திட்டத்தினால் இலங்கைக்கான நிதியுதவிக்கு அனுமதி

உலக உணவுத்திட்டத்தின் நிறைவேற்றுச் சபையினால் இலங்கைக்கான 39 இலட்சத்து 755 ஆயிரத்து 501 அமெரிக்க டொலர் நிதியுதவிக்கான அனுமதி கடந்த 11 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பட்டினியை ஒழிப்பதே இதன் பிரதான நோக் கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இடம்பெயர்ந்தவர்களின் வாழ்வாதாரங்களை மீளமைப்பதற்கும் மீளக் குடியமர்த்தப்பட்டவர்களுக்கான நிவாரணங்களும் வழங்குவதற்கு இதனூடாக திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் காலம் பிந்திய அனுமதி மற்றும் மீள் நிரப்பு நடவடிக்கையானது முன்னர் உள்ளக மோதல்களால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீளமைப்பு மற்றும் முன் கூட்டிய மீட்சி என்பவற்றுக்கான உதவி என தலைப்பிடப்பட்டது. குறிப்பாக வடக்கு பிராந்தியத்திற்கு தேவையான மனித நேய மற்றும் முன் கூட்டிய மீளமைப்புகளுக்காக சர்வதேச உணவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கிடப்படவுள்ளது.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட 3 இலட்சத்து 71 ஆயிரம் பயனாளிகளை நோக்காக கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக உலக உணவுத் தாபனம் தெரிவித் துள்ளது.

(ஸ்ரீ-2)



யா/மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞானதின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பேராசிரியர் பு.ரவிராஜன்,திருமதி வாசுகி ரவிராஜன், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் குணசீலன் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் ஆகியோர் அழைத்து வரப்படுவதை படத்தில் காணவாம். (படம் பா.பாலமுரளி)

2010-11
15

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1505 - போர்த்துக்கேய மாலுமியும் நாடுகாண் பயணியுமான லோரன்ஸ் டி அல் மெய்டா, கொழும்பை வந்தடைந்து ஐரோப்பியக் குடியேற்றத்தை ஆரம்பித்தான்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டுப்படைத் தளபதி வில்லியம் ஷேர்மன் அட்லாண்டா நகரைத் தீக்கிரையாக்கி ஜோர்ஜியாவின் சவான்னா துறைமுகம் நோக்கி நகர்ந்தார்.
- 1889 - பிரேசில் குடியரசாகியது. இரண்டாம் பெதரோ ஆட்சியிழந்தான்.
- 1926 - என்பிசி வானொலி 24 நிலையங்களிலும் தனது வானொலி சேவையை ஆரம் பித்தது.
- 1941 - நாசி ஜெர்மனியில் சில உயர் அதிகாரிகளைத் தவிர்த்து அனைத்து ஓரினச்சேர்க்கையாளர்களையும் வதை முகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப் பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: சொலமன் தீவுகளில் குவாடல்கனல் என்ற இடத்தில் ஜப்பானியப் கடற்படையுடன் இடம் பெற்ற மோதல்களில் கூட்டுப் படைகள் வெற்றி பெற்றன.
- 1943 - நாசி ஜெர்மினியில் அனைத்து ஜிப்சிகளையும் யூதர்களுக்கு இணையாக வதைமுகாம்களுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.
- 1949 - நாதுராம் கோட்சே, மற்றும் நாராயண் ஆப்டே இருவரும் மகாத்மா காந்தியைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு தூக்கிலிடப் பட்டனர்.
- 1966 - ஜெமினி 12 விண்கலம் அட்லாண்டிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.
- 1969 - வியட்நாம் போர்: வோஷிங்டன் டிசியில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் தொடக்கம் 5 இலட்சம் பேர்வரை போருக்கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர்.
- 1970 - சோவியத்தின் லூனா தானூர்தி சந்திரனில் தரையிறங்கியது.
- 1971 - இண்டெல் நிறுவனம் உலகின் வர்த்தகரீதியிலான முதலாவது 4004 என்ற single - chip microprocessor ஐ வெளியிட்டது.
- 1978 - டிசி-8 ரக தனியார் பயணிகள் விமானம் கொழும்புக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதில் 183 பேர் கொல்லப்பட்டனர்.
- 1983 - வடக்கு சைப்பிரஸ் துருக்கியக் குடியரசு நிறுவப்பட்டது. துருக்கி மட்டுமே இதனை அங்கீகரித்தது.
- 1988 - சோவியத் ஒன்றியத்தின் ஆளற்ற பூரான் விண்ணோடம் தனது முதலாவது கடைசியுமான பயணத்தை ஆரம்பித்தது.
- 1988 - பாலஸ்தீன நாடு பாலஸ்தீன தேசிய கவுன்சிலினால் அறிவிக்கப்பட்டது.
- 1990 - அட்லாண்டிஸ் விண்ணோடம் STS - 38 சுப்பலை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 2002 - ஹூ சிங்தாவ் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- 2007 - பங்களாதேசில் கடும் சூறாவளியினால் 5ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1738 - வில்லியம் ஹேர்ச்செல், விண்கோள் யுரேனசைக் கண்டு பிடித்த ஜெர்மன் விஞ்ஞானி (இ. 1822)
- 1986 - சானியா மிர்சா, இந்தியாவின் டென்னிஸ் வீராங்கனை

## இறப்புகள்

- 1630 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜெர்மானியகணிதவியலாளரும், வானியலாளரும் (பி. 1571)
- 1917 - எமில் டேர்க்கேம், பிரெஞ்சு சமூகவியலாளர் (பி. 1858)
- 1949 - நாத்தூராம் கோட்சே, மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற கொலையாளி (பி. 1910)
- 1949 - நாராயண் ஆப்தே, மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்ற கொலையாளி (பி. 1911)
- 1961 - இலங்கையர்கோன், ஈழத்து சிறுகதை எழுத்தாளர், நாடகாசிரியர்
- 1982 - வினோயா பாவே, (பி. 1895)

## 1948 - இலங்கையில் மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.



# பாகிஸ்தானின் எதிர்ப்புக்கு அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார்.

பாராளுமன்ற கூட்டத்தில் உரை நிகழ்த்திய அவர்,

ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் மாற்றி அமைக்கப்படும் போது அதில் இந்தியா நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து பெற அமெரிக்கா ஆதரவு அளிக்கும் என்றார். பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் ஏற்கனவே ஆதரவு தெரிவித்த நிலையில் ஒபாமா கூறியது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கு ஆதரவாக ஜனாதிபதி ஒபாமா பேசியதற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் ஒபாமா அறிவிப்பால் தெற்காசிய பிராந்தியத்தில் அசாதாரணமான சூழ்நிலை ஏற்படும் என்றும் புலம்பியது.

இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் கிரவ்லி கூறியதாவது,

இந்தியாவுக்கு ஜனாதிபதி ஒபாமா ஆதரவு அளித்த விவகாரத்தில் பாகிஸ்தான் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை. இந்தியாவுக்கு ஆதரவாகப் பேசியதால் பிரச்சினைகள் ஏற்படும் என்று பாக். கருத வேண்டாம்.

ஐ.நா.கவுன்சிலில் இந்தியா நிரந்தர இடம் பெற பாகிஸ்தான் ஒன்றும் எதையும் தியாகம் செய்யப்போவதில்லை. உலகின் மற்றப் பகுதிகளை விட அந்தப் பிராந்தியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்திலேயே ஒபாமா இந்தியாவுக்கு ஆதரவாக கருத்துக் கூறியுள்ளார்.

தவிர ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக சேர்ப்பதற்கு ஏராளமான நடைமுறைகள் உள்ளன. நிரந்தர உறுப்பினராக இடம்பெற அமெரிக்காவின் ஆதரவு மட்டும் போதாது. இந்த விடயத்தில் பல்வேறு உறுப்பு நாடுகளுக்கு தொடர்பு உள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதுபற்றி பாகிஸ்தான் அரசிடம் விளக்கம் அறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிரவ்லி கூறினார். ஸ்ரீ



வீட்டுக்காவலில் இருந்து நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட ஆங் சான் சூகிக்கு அவரது ஆதரவாளர்கள் பூங்கொத்து கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

# குற்றவாளிகளுக்கு டுவிட்டரில் வலை; பிரிட்டன் பொலிஸார் புது யுக்தி

(லண்டன்)

கொலை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளை டுவிட்டர் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் மூலம் பிடிக்க பொலிஸாருக்கு பிரிட்டனில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.


டுவிட்டர் பேஸ்புக் ஆர்குட் மற்றும் பிளாக்குக்கள் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை அனைத்து தரப்பினரும் பயன்படுத்தி வருகின்றனர். உலகம் முழுவதும் ஏராளமானோர் இந்த வலைத்தளங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். கொலை உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்ட சமூக விரோதிகளும் தலை மறைவாக உள்ள குற்றவாளிகளும் சமூக வலைத்தளங்களில் உறுப்பினர்களாக உள்ளனர்.

அவர்களை அந்த வலைத்தளங்கள் மூலமாகவே வலைவிரித்துப் பிடிக்க பிரிட்டனில் பொலிஸாருக்கும் உளவாளிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது 3500 பேருக்கு இந்தப் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டு வருகிறது.

சமூக வலைத்தளங்களில் உறுப்பினர்களாக உள்ள குற்றவாளிகளை அடையாளம் காண்பது பின்னர் அவர்களுடன் தகவல் தொடர்பை வளர்த்துக் கொண்டு அவர்களின் இருப்பிடத்தை அறிந்து கொள்வது உள்ளிட்ட பயிற்சிகள் இதில் அடங்கும் கம்ப்யூட்டர் செல்போன் உள்ளிட்ட எலக்ட்ரோனிக் பொருட்களைப் பயன்படுத்துவது குறித்து பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்படும். ஸ்ரீ




# கடலில் மிதக்கும் நகரங்கள்!



உலகில் தற்போது சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டுள்ளது. அதிகப்படியான காபன் வெளியேற்றப்படுவதால் இதுபோன்று மாசு ஏற்பட்டு மக்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. எனவே சுற்றுச்சூழல் மாசு ஏற்படாத வகையில் கடலில் மிதக்கும் நகரங்களை உருவாக்க ஜப்பான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஜப்பானில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கடலில் மிதக்கும் நிலங்களை உருவாக்கி அதன்மூலம் விவாசயம் செய்யப்படுகிறது.

கடலில் எங்கு பார்த்தாலும் பசுமை மயமாக்கப்படுள்ளது. அதுபோன்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மிதக்கும் நகரங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் பசுபிக் கடலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கடலில் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு நகரம் அமைக்கப்படவுள்ளது. இங்கு 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மக்கள் வரை வாழ முடியும்.

இந்த நகரங்களை இணைக்கும் வகையில் மிதக்கும் வீதிகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் கிராமங்களில் புல்வெளிகள் மற்றும் வனப் பகுதியும் உருவாக்கப்படுகிறது.

இவை மிக மெல்லிய உலோக கலவையுடன் கடல் நீரில் உள்ள மக்னீசியம் மூலம் தயாரிக்கப்படும் உலோகத்துடன் கலந்து உருவாக்கப்படும்.


எதிர்காலத்தில் இது போன்ற கற்பனை நகரம் அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல் மாசுபடாத புதிய சமுதாயம் ஏற்படும். ஸ்ரீ

# சீனப் பிரதமர் டிசம்பரில் பாகிஸ்தான் சுற்றுப்பயணம்

(பீஜிங்)

சீனப் பிரதமர் வென் ஜியாபோ அடுத்த மாதம் நடுப்பகுதியில் பாகிஸ்தான் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருப்பதாக சீன மற்றும் பாகிஸ்தான் தரப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

மேலும் அவ்வாறு அவர் பயணம் மேற்கொள்ளும்போது இந்தியாவிற்கும் செல்ல இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த சுற்றுப் பயணத்தின் போது டிசம்பர் மாதம் 16 ,17ஆம் திகதிகளில் புதுடில்லி வர திட்ட மிடப்பட்டுள்ளதாக அரசு வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீ



ஆபிரிக்காவின் தான்சானியா நாட்டில், சுரங்க விபத்துக்களை முன்கூட்டியே கண்டறிவதற்காக எலிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. சுரங்கங்களில் திடீரென ஏற்படும் நிலச்சரிவு, புகை மற்றும் விஷவாயுவை இந்த எலிகள் முன்பே கண்டறிந்து எச்சரிக்கை செய்கின்றன. இந்த எலிகளின் எச்சரிக்கைமூலம், சுரங்கத்திற்குள் சிக்கிக்கொண்டவர்களை ஒன்றரை மணிநேரத்தில் மீட்டு விட முடியும் என்கின்றனர்.

# போதைப் பொருட்களை விட அற்ககோல் மிகவும் மோசமானது

## ஆய்வில் தகவல்

(லண்டன்)

கோகைன், ஹெராயின் போதை பொருட்களை விட அற்ககோல் கடும் பின் விளைவுகளை ஏற்படுத்த வல்லது என பிரிட்டன் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

கோகைன், ஹெராயின் மற்றும் அற்ககோல் பயன்படுத்துவதால் ஏற்படும் பக்க விளைவுகள்குறித்து பிரிட்டன் போதைப் பொருள் அறிவியல் ஆய்வு மையமும் ஐரோப்பிய மது அடிமைகள் ஆய்வு மையமும் இணைந்து ஆய்வு மேற்கொண்டன. இதில் போதை பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் பக்க விளைவுகளை ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் அற்ககோல் பயன்படுத்துவோருக்கு அதிக பாதிப்புகள் எற்படுவது தெரிந்தது.

இது குறித்து ஐ.எஸ்.சி.டி தலைவர் டேவிட் நெட் கூறியதாவது,

பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வயது வந்தோர் அற்ககோல் மற்றும் புகையிலை பொருட்களை பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகாது. அதேசமயம் கோகைன், ஹெராயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பயன்படுத்துவது சட்டப்படி குற்றம். இக்குற்றத்திற்கு சிறை தண்டனையும் உண்டு. எங்கள் ஆய்வில் கோகைன் மற்றும் ஹெராயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பயன்படுத்துவோரை விட அற்ககோல் மற்றும் புகையிலை பொருட்கள் பயன்படுத்துவோருக்கு அதிக பாதிப்புகள் ஏற்படுவது தெரிந்தது.

இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள அற்க்கோல் மற்றும் புகையிலை பொருட்களால் மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அற்ககோல் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்களை ஒப்படும் போது தடை செய்யப்பட்ட போதை பொருட்களான கோகைன், ஹெராயின் போதை பொருட்களால் ஏற்படும் பாதிப்புகள் குறைவாக இருப்பது தெரிந்தது. இவ்வாறு டேவிட் நெட் கூறினார்.

உலகில் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதில் அற்ககோல் மூன்றாவது முக்கிய காரணியாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ

# 15 வருட வீட்டுச் சிறையிலிருந்து மீண்ட மியன்மாரின் இரும்புப் பெண்மணி



ஆங் சான் சூகி

"திடீரென்று ஒருநாள் நான் தெருவில் போய்க் கொண்டிருக்கும் போது சுட்டுச் சாகடிக்கப்படலாம். அது கூடிய சீக்கிரமே நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன். என்னைச் சுடுவது யாராயிருந்தாலும் சரி... அது இராணுவ ஜெனரல் நி வின் அனுப்பிய ஆளாகத்தான் இருக்கும்"

அமெரிக்க நிருபர் ஒருவரிடம் இப்படிச் சொன்ன இரண்டு வாரங்களில், ஆங் சான் சூகி என்கிற அந்த இரும்புப் பெண்மணி மியன்மார் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வீட்டிலேயே சிறை வைக்கப்பட்டார். அவரோடு சேர்ந்து 2ஆயிரத்துக்கும் அதிகமான ஆதரவா ளர்கள் கைதானார்கள்.

கடந்த 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி கைதான சூகி வீட்டுச் சிறையில் இருந்தவரை, அவர் எப்படியிருக்கிறார். அவர் உடல் நலம் எப்படிருகிறது என்பதைக் கூட மியன்மார் இராணுவம் இரகசியமாக வைத்திருந்தது.

அந்த நிலையில் கடந்த 1991 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசை சூ கி பெற்றிருக்கிறார்.

சிறிய வயதிலேயே மியன்மாரை விட்டுப் போய்விட்ட சூகி கடந்த 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திரும்பி வந்தார். வந்த தினத்திலி ருந்தே இராணுவ அதிபர் நி வின்னுக்கு எதிராகக் குரல் கொடுத்து, மிக வேகமாக மக்கள் ஆதரவைத் திரட்டத் தொடங்கினார்.

நி வின் பெயரைப் பொது இடத்தில் சொல்லக்கூட பயந்து கொண்டிருந்த மியன்மார் மக்கள் திடீரென்று சூகி எழுப்பிய எதிர்ப்புக் குரலைக் கண்டுமுதலில் திகைத்தார்கள்.பின் மளமளவென்று அவருக்கு ஆதரவாக இணையத் தொடங்கினார்கள். சூகி எழுப்பிய "பயத்திலிருந்து விடுதலை" என்ற கோஷம் வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

தான் மியன்மாருக்கு வந்த ஐந்தே மாதங்களில் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு (National League for Democracy) என்று கட்சி தொடங்கி விட்டார்.படுவேகமாக உறுப்பினர்கள் இணையத் தொடங்கினார்கள். " 27 வருடங்ள் நி வின் ஆண்ட இராணுவ ஆட்சியில் நாங்கள் அடிமைகளாக இருந்தபோதும். உடனே ஜனநாயக முறையில் தேர்தல் நடத்துங்கள்!" என்ற கோஷம் காதைக் கிழித்தது.

இந்த அபார எதிர்ப்பைக் கண்டு இராணுவத் தலைமை நடுங்கியது. " பொதுக்கூட்டங்கள் நடத்தக்கூடாது! 5பேருக்கு மேல் ஒரு இடத்தில் சேர்ந்து நிற்கக்கூடாது. குறிப்பாக என்.எல்.டி. கட்சித் தலைவி சூகி வீதியிலேயே நடக்கக் கூடாது! மீறி நடந்தால் சுடப்படுவார்!" என்றெல்லாம் அதிரடி உத்தர வுகள் பிறப்பிக்கப்பட்டன.

அதையும் மீறி பொதுக்கூட்டங்கள் நடத்தினார் சூகி குறிப்பாக யாங்கோன் நகரத்தில் நடந்த கூட்டம்... 'திமுதிமு'வென மக்கள் வெள்ளம் சேர்ந்தத். சூகி தனது பேச்சுத் தொடங்குவதற்கு முன்பாக சாரி சாரியாக இராணுவ லொறிகள் வந்து நின்றன. துப்பாக்கியுடன் வீரர்கள் தபதபவென இறங்கினர். மக்களை நோக்கிச் சுடத் தயாரானார்கள். சலசலத்த கூட்டத்தைப் பார்த்து சூகி ஆவேசமாய்ச் சொன்னார். "பயப்படாதீர்கள்! தைரியமாக இருப்பது எப்படி 'என்று நமக்கு பயிற்சியளிக்கத்தான் இவர்கள் வந்திருக்கிறார்கள். நம் வீரத்தை முதலில் இங்கே நிரூபிப்போம்!"

மந்திரம் போட்ட மாதிரி நின்றது கூட்டம் . சூகி பேச்சைக் கேட்கத் தொடங்கியது. சூகி சொல்லுக்கு இருந்த சக்தியைக் கண்டு இராணுவப் படை பிரமித்தது. ஒரு குண்டுகூட சுடாமல், சும்மா நின்றுவிட்டுத் திரும்பியது.

இராணுவத்தின் தொடர்ந்த மோசமான ஆட்சியினால் மியன்மாரி பொருளாதாரம் சீர்குலைந்தபோது, குறிப்பிட்ட மதிப்புள்ள மியன்மார் பணம் செல்லாது என்று அறிவித்துவிட்டார் நி வின். இதனால் ஏழை, பணக்காரன் என்று வித்தியாசமில்லாமல்



நி வின்

சகலரும் கடுமையாகப் பாதிக்கப்பட, திரண்டு நின்று போராட்டம் நடத்தினார்கள்.

இராணுவம் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை வெறிபிடித்துச் சுட்டது. அப்படியும்.இந்தப் போராட்டத்தை ஒடுக்கமுடியாது என்று நிவின் உணர்ந்தார். " ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்போகிறேன் ஜெயிக்கிற கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கின்றேன்" என்றார்.

சூகி ஏமாறத் தயாராயில்லை. "நிச்சயம் தேர்தல் நடத்தியே ஆக வேண்டும்.மக்களை ஏமாற்ற நான் அனுமதிக்கமாட்டேன்!" என்று குரல் கொடுத்தார். மக்கள் போராட்டம் வலுத்தது. ஆட்சியாளர்களுக்கு ஆத்திரம் பொங்கியது. மியன்மாரின் சுவர்கள் முழுக்க அநாமதேய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. அதில் சூகி பற்றி மிகக் கேவலமான வார்த்தைகள் அவரைச் சம்பந் தப்படுத்தி அசிங்கமான ஓவியங்கள் தீட்டினர். ' அதை ஒட்டியது நி வின் ஆட்கள் தான் என்பது மக்களுக்கும் தெரியும். விளைவு...? சூகிக்கு ஆதரவாக பலமடங்கு அதிகமானது.



இராணுவத் தளபதியாக நி வின் இருந்த போதும், அவரை முதலில் தூக்கி யெறியுங்கள். இராணுவம் மக்களுக்குத்தான் விசுவாசமாக இருக்க வேண்டும். நி வின் சொல்படி நடப்பதற்கு அல்ல!" என்றார் சூகி.

கொதித்துப் போனார் நிவின். அந்தப் பெண்மணியையும் சரி, அவரது ஆதரவாளர்களையும் சரி... ஒருத்தரைக்கூட விட்டுவைக்காதீர்கள்! என்று உத்தரவிட்டார்.

மியன்மாரின் மூலை முடுக்குகளில் எல்லாம் இராணுவம் புகுந்தது. கடந்த 1989 ஆம் வருடம் ஜூலை மாதம் 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டார் சூகி. 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட "என். எல்.டி." கட்சிப் பிரமுகர்களும் கைதானார்கள். இதுதவிர தொண்டர்கள் பலர் ஆங்காங்கே சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

வீட்டுச் சிறையில் வைக்கப்பட்ட சூகியைப் பார்க்க அவரது உறவினர்கள், நண்பர்கள் யாரும் அனுதிக்கப்படவில்லை. அவர் வீட்டு தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது. அவரது கணவர்கூடப் பத்திரிகையாளர்களிடம் பேச முடியாதபடி தடை செய்யப்பட்டார். இரண்டு பிள்ளைகள் சூகிக்கு உண்டு. அவர்கள் வெளியில் போய் வரவும் கெடுபிடிகள் விதிக்கப்பட்டன.

சூகி கைதாகி பத்து மாதங்கள் கழித்து, கடந்த 1990ஆம் வருடம் மேமாதம், நி வின் சொன்னபடியே மியன்மாரில் தேர்தல் நடந்தது. " சூகி மேல் மக்கள் வைத்திருந்த பற்றுதல் முற்றிலும் மறைந்து போயிருக்கும்" என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டது நி வின் கைப்பாவையான இராணுவத் தலைமை.

கிட்டத்தட்ட 80 சதவிகித இடங்களை சூகி கட்சி பிடித்துவிட்டது. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் புரண்டார்கள். கூடிய சீக்கிரமே மந்திரிசபை அமைப்போம். சிறையிலிருக்கும் தலைவியை வெளியில்கொண்டு வருவது தான் எங்கள் முதல் வேலை!" என்று என்.எல்.டி பிரமுகர்கள் சொன்னார்கள்.

அவர்கள் தலையில் இடி விழுந்தது! " இந்தத் தேர்தல் வெற்றி செல்லாது" என்று சொல்லித் தொடர்ந்து ஆளத் தொடங்கியது இராணுவம்.

சூகிக்குச் சிறைவாசம் தொடர்ந்தது.

இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய அவர், கடந்த 21 ஆண்டுகளில் சுமார் 15 ஆண்டுகளை சிறையிலேயே கழித்துள்ளார். ஆங் சான் சூகியின் வீட்டுக் காவல் முடிவடையவிருந்த சூழலில் கடந்த ஆண்டு அவரைச் சந்திப்பதற்காக அமெரிக்கர் ஒருவர் அவரது வீட்டுக்கு முன் உள்ள ஏரியை நீந்திக் கடந்து திருட்டுத்தனமாக வீட்டுக்குள் நுழைந்தார். இது தொடர்பாக, சூகி மீது வழக்கு தொடரப்பட்டது. அப்போது அவருக்கு வீட்டுக்காவல் தண்டனைமேலும் 18 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. இந்நிலையில் அவரது தண்டனை நீடிப்பு காலம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்தது. இதனால் அவரை விடுவிக்க வேண்டிய கட்டாயம் மியன்மார் இராணுவ அரசுக்கு ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து அவர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார்.

திருமணமான பெண்கள், கணவனின் பெயரைத்தான் தங்கள் பெயருடன் சேர்த்து வைத்துக் கொள்வது வழக்கம். ஆனால், சூகி பெயருக்கு முன்னால் இருக்கும் "ஆங்சான்" அவரது அப்பா பெயர். மிகப் பெரிய சுதந்திரப் போராட்டத் தியாகியான அவர் , வெள்ளை யர்களிடமிருந்து மியன்மார் விடுதலை அடைவதற்கு ஆறு மாதங்கள் முன்புதான் கொல்லப்பட்டார். அப்போது சூகிக்கு வயது இரண்டு!

டில்லியில், லேடி ஸ்ரீராம் காலேஜில்தான் டிகிரி படித்தார் சூகி. அதன்பின் ஒக்ஸ்பேர்ட் பல்கலைக் கழகத்தில் படித்தார். அமெரிக்காவின் முக்கிய அரசுப் பதவியில் இருந்தார். சிறிது நாட்கள் தன் கணவருடன் பிரிட்டனில் வாழ்ந்தார். கடந்த 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மியன்மாரிலிருந்த தன் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையென்று திரும்பி வந்தபோது தான் அங்கேயே வசித்து, மிகப் பெரிய மக்கள் தலைவியானார்.

நன்றி:-ஆனந்தவிகடன்

ஒரு கல்விச்சாலையைத் திறப்பவன் ஒரு சிறைச்சாலையை மூடுபவனாகிறான்.

—லா புருயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வடக்கின் அபிவிருத்திப் பணியில் இளைஞர்களின் பங்கு அவசியம்

## புத்தூர் சோமஸ்கந்தாவில் நாமல் உரை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய அபிவிருத்திகளில் இளைஞர்களின் பங்களிப்பு மிக அவசியம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி வீதி புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்உரையாற்றுகையில், 30 ஆண்டுகளுக்குப் பின்பு இத்தகைய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றது. யுத்தத்தால் நாட்டின் பல பாகங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன. அவை புனரமைப்புச் செய்யவேண்டியது அவசியமானது. இந்தப் பாடசாலை சமூகத்தினர் என்னிடம் பாடசாலை வீதிகளைப் புனரமைத்துத் தரவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களின் வேண்டுகோள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கிறேன்.

நாட்டில் தற்போது சுதந்திரமாகவும் மக்கள் அனைவரும் ஒரு சமூகத்தினராகவும் வாழும் காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. வட மாகாணத்தை பொறுத்தவரை வீதிப் புனரமைப்புப் பணிகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பலர் தொழில் வாய்ப்பினையும் பெற்றுள்ளனர். நாம் எமது அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகின்றோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது.

அவர்கள் எமது நாட்டவர்கள். அவர்களின் முன்னேற்றத்திற்கு எமது பங்களிப்பு இன்றியமையாதது.

இங்கு கூடியிருக்கும் பாடசாலை பிள்ளைகளுக்கு நான் கூறுவது, நீங்கள் கல்வி கற்பவர்கள். எதிர்காலத்தில் வைத் தியர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ, சிறந்த அரசியல்வாதிகளாகவோ ஆக வேண்டும்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணியும் போற்றுதலுக்குரியது. எனது தந்தை அடிக்கடி கூறுவார் மக்களுக்கு நாம் நல்ல நண்பர்களாக இருந்து அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும், மக்கள் சேவை மகேசன் சேவை என்பது போல.



எனவே பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் புனரமைக்கப்பட்டு இயல்பு நிலை மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## தங்கராசு... தங்கராசு... அவர் ஸ்கூலுக்கு போயிற்றார்...

தமிழகத்து தொலைக்காட்சிகளில் அண்மைக் காலமாக ஒரு விளம்பரம் செய்யப்பட்டு வருகின்றது.

விவசாய உற்பத்திக்காகச் செய்யப்படும் அந்த விளம்பரத்தில் தங்கராசு என்ற விவசாயிக்கு கடன் கொடுத்த ஒருவர் அவரின் வீட்டிற்குச் சென்று தங்கராசு... தங்கராசு... எனக் கூப்பிடுகின்றார்.

தங்கராசுவின் மனைவி வீட்டுக்கு வெளியில் வந்து அவர் ஸ்கூலுக்கு (School) போய்விட்டார் என தெரிவிக்கின்றார்.

இதைக்கேட்ட கடன் கொடுத்தவர் நளினமாகச் சிரிக்கின்றார். என்ன? இந்த வயதில் ஸ்கூலுக்குப் போயிற்றாரா? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டும் என்கிறார்.

உடனே தங்கராசுவின் மனைவி அவர் விவசாய ஸ்கூலுக்கு போயிற்றார் என விளக்கம் கொடுக்கின்றார்.

கூடவே விவசாயப் பள்ளியில் விவசாயிகளுக்கு விளக்கம் கொடுக்கும் காட்சிகளும் காண்பிக்கப்படுகின்றன.

தொடர்ந்து ஒரு கட்டுப் பணத்தைக் கொண்டு சென்று கடன் கொடுத்தவரிடம் செலுத்தி விடுகின்றார் தங்கராசு.

என் கடன் எல்லாம் தந்து முடிந்தாயிற்று என்று தங்கராசு மகிழ்ச்சியடைவதாகவும் அந்த விளம்பரம் அமைந்திருந்தது.

அந்த விளம்பரம் பற்றி இங்கு ஏன் பிரஸ்தாபிக்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

எங்களுக்கு அண்மையில் இருக்கக்கூடிய தமிழகத்தில் விவசாயம் விளைகின்றது. நெற்செய்கை முதல் கரும்புச் செய்கைவரை அங்கு வேளாண்மை கோலோச்சுகின்றது.

ஆனால் எங்கள் மண்ணில் விவசாய விளை நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலாக தென்னை விளையும் முகமாலை, பளை, ஆழியவளை, கிளாலி ஆகிய பெரும் பிரதேசங்கள் மிதிவெடிகளின் பூமியாகி முட்செடிகளதும், பற்றைகளதும் ஆக்கிரமிப்பில் வளம் இழந்து போயிற்று.

மறுபுறத்தே பொன் விளையும் வன்னி மண் கெந்தகத்தைத் தாங்குவதும், உருக்குலைந்த சடலங்களின் முணுமுணுப்பில் அழுவதும், முட்கம்பி வேலிகளின் தடையில் தன் விவசாய எஜமான்களைக் காணமுடியாமல் விம்மி வெதும்புவதுமாக காலம் போக்குகின்றது.

எப்படி எங்கள் மண்ணில் விவசாயம் மேலெழும்; முயற்சிகள் திருவினையாக்கும். இவை யுத்தத்தால் ஏற்பட்ட துயரங்கள்.

இதற்கு அப்பால் விவசாயச் செய் நிலத்தை ஆக்கிரமிக்கும் பாதீனியம், புதுப்புது பூச்சி வியாதிகள், தடுப்பது யார்?

சந்தையில் ஒரு பிடி கீரை நாற்பது ரூபாய். பூச்சி சல்லடை போடாத இலையைக் காண்பது அரிது. எப்படி எங்கள் விவசாயம்?

அட! தமிழகத்து தங்கராசு எங்கள் தமிழ் மண்ணில் விவசாயம் செய்திருந்தால் வைத்தியசாலைக்குத்தான் சென்றிருப்பார். தீரா வருத்தம் காரணமாக.

## ஸ்ரீ நாக விகாரையின் வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முதல்நாள் உற்சவத்தின் போது புதிதாக வடிவமைக்கப்பட்ட புத்த பெருமானின் பிரதிஷ்டையும் விசேட பூசைகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை மறுநாள் உற்சவத்தின்போது காலை விசேட பூசைகளைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ந-7)

## முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சி நாளை

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் வலய மட்ட கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை காலை 10.30 மணிக்கு நாரந்தனை றோ.க. மகாவித்தியாலயத்தில் முறைசாராக்கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. கணபதி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி. ராதாக்கிருஷ்ணன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ந-7)

## முகாமைத்துவ பட்டக்கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டக் கற்கை நெறிக்கான (BMS) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சை மூலம்இக் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பப் படிவங்களை 20.11.2010க்கு முன்பதாக இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். பின்வருவோர் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் புதிய பாடத் திட்டமாயின் மூன்று பாடங்களும் பழைய பாடத் திட்டமாயின் நான்கு பாடங்களும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது,

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ESBM அல்லது, இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு சான்றிதழ் கற்கைநெறியினை நிறைவு செய்திருத்தல் வேண்டும். அல்லது,

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தில் டிப்ளோமா பட்டக் கற்கைநெறியினை நிறைவு செய்திருத்தல் வேண்டும். அல்லது,

பட்டதாரி அல்லாத பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது,

HNDA முதலாம் வருட மாணவர்கள் அல்லது,

இலங்கை நூலக ஒன்றிய இறுதிப் பரீட்சை எழுதிய மாணவர்கள் அல்லது,

வங்கியியலும் நிதியியலும் உயர் கல்விச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள். (ந)


## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள், பணிமனையின் அனுசரணையுடன் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் இலவச மருத்துவ முகாம் நாளை செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை அரசினர் மாமுனை தமிழ் கலவன் பாடசாலையில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையும், மறு நாள் புதன்கிழமை உடுத்துறை மகாவித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரையும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சலரோகம், உயர் குருதியமுக்கம் ஆகியவற்றுக்கான வைத்திய பரிசோதனைகள் நடத்தப்படுவதுடன், சகல விதமான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு அதற்கான தகுந்த வைத்திய ஆலோசனைகளும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மற்றும் அனுபவம்மிக்க வைத்திய உத்தியோகத்தர்களால் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


## சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவுகள்



மூடநம்பிக்கை, மனிதனின் பெரும் பகைவன்தான். ஆனால், மதவெறி அதை விட மோசமானது. கிறிஸ்தவன் ஏன் சர்ச்சிற்குப் போகிறான்? சிலுவை ஏன் புனிதமானது? பிரார்த்தனை செய்யும்போது முகம் ஏன் வானை நோக்க வேண்டும்? கத்தோலிக்க சர்ச்சுகளில் ஏன் அத்தனை உருவங்கள் இருக்கின்றன? புரட்டஸ்டான்டினர் பிரார்த்தனை செய்யும் போது அவர்கள் உள்ளங்களில் ஏன் அத்தனை உருவங்கள் உள்ளன?

என் சகோதரர்களே சுவாசிக்காமல் உயிர் வாழ முடியாதது போல, உள்ளத்தில் ஓர் உருவத் தோற்றமின்றி, நாம் எதனையும் நினைத்துப் பார்க்க முடியாது. இணைப்பு விதியின்படி (Law of Association) வெளி உருவம் உள் உருவத்தையும் உள் உருவம் வெளி உருவத்தையும் நினைவு படுத்துகிறது. அதனால் தான் இந்து வழிபடும்போது,ஒருபுறச் சின்னத்தைப் பயன்படுத்துகிறான். தான் வழிபடும் பரம்பொருளின் மீது சிந்தையைப் பதியச் செய்வதற்கு அது உதவுகிறது என்று அவன் கூறுவான். அந்த உருவம் கடவுள் அல்ல, அது எங்கும் நிறைந்தது அல்ல என்று உங்களைப் போல அவனுக்கும் தெரியும். ‘எங்கும் நிறைந்தது’ என்று சொல்லும் போது பெரிதாக என்ன தான் புரிந்து கொள்ளமுடியும்? அது ஒரு சொல், சின்னம் மட்டுமே. இறைவனுக்குப் பரப்பு இருக்க முடியுமா, என்ன? ‘எங்கும் நிறைந்தவர்’ என்று நாம் திரும்பத் திரும்பச் சொல்லும்போது, மிஞ்சிப் போனால், விரிந்த வானையும் பரந்த வெளியையும் நினைக்கலாம், அவ்வளவுதான்.

## மாகாண மட்ட வினாடிவினா போட்டியில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட கணித வினாடி வினாப்போட்டி அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவனான இராசேந்திரன் ஜனார்த்தனன் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ)

## கிளிநொச்சி பஸ்நிலையம் திடீரென அம்பாள்புரம் சந்தைக்கு மாற்றம்

## பயணிகள் பெரும் அசௌகரியம்

கடந்த இரு மாத காலமாக கிளிநொச்சி கனகபுரம் சாலையில் இயங்கி வந்த பஸ் நிலையம் நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி அம்பாள்புரம் புதிய சந்தைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த பஸ் நிலையம் மாற்றப்பட்டதைத் தொடர்ந்து வழமை போன்று கனகபுரம் சாலையில் நிறுத்தி பயணிகளை ஏற்ற முற்பட்ட போது அந்த வாகனங்களை அங்கு நிறுத்த வேண்டாம் என்றும் பயணிகளை அவ்விடத்தில் நிற்க வேண்டாம் என்றும் அம்பாள் புதிய சந்தைக்கு நகர்த்தும்படி கேட்டபோது அங்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனால் வாகன சாரதிகள் தமது கடமையைப் புறக்கணித்துவிட்டு சென்றனர். இதன் போது பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பயணிகள் தமது பயணத்தை பஸ்களில் தொடராமல் முச்சக்கர வண்டிகளில் ஏறிச் சென்றமையை காண முடிந்தது.

(ஸ்ரீ-84)

## கஞ்சா வைத்திருந்த 9 படையினர் கைது

(கொழும்பு)

ஹதரெஸ்கொட்டுவைப் பகுதியில் 800 கிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 9 படையினர் ஹபரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் சட்டைப்பைகளிலும் காற்சட்டைகளிலும் கஞ்சாவை மறைத்து வைத்திருந்துள்ளனர். இவர்கள் பயணித்த தனியார் பஸ் பொலிஸாரின் வீதித் தடையில் நிறுத்தப்பட்ட போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த 9 படையினரும் தமது விடுமுறையைக் கழித்துவிட்டு முகாமுக்கு திரும்புகையிலேயே இக் கைது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் ஹபரணைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## இலங்கைக்கு இலகு கடன் வழங்க ஈரான் இணக்கம்

ஆசிய வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலான 9 ஆவது மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஈரான் வெளிவிவகார அமைச்சரை தனியாக சந்தித்து உரையாடியுள்ளார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மனோச்சரி மௌட்டாக்கியுடன் இருதரப்பு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அகமத் நிஜாத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது இலங்கைக்கு இலகு முறையிலான மேலதிக கடன்கள் வழங்குவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## சவுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட ரிஷானா நபீக் விடுதலையாகும் சாத்தியம்!

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் ரிசானா நபீக்குக் பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சவுதி அரேபிய மன்னரிடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய பணிப்பெண் தொடர்பாக கலந்துரையாட சவுதி அரேபியாவின் அப்துல்லா பின் அப்துலாஸினால் அவரின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ரிசானா நபீக் விடுதலை பெற்று கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கைப் பணிப்பெண்கள் பலதரப்பட்ட சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவது தொடர்பாக அண்மையில் தொடர்ச்சியாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு விரிவாக்கல் நடவடிக்கைகள் வெளிவிவகார அமைச்சின் கீழேயே மேற்கொள்ளப்படுகிறது.

இதனடிப்படையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பினை பெற்றுச்செல்லும் பணியாளர்களுக்கு நியாயமான நிவாரணங்கள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஜோர்தானில் பல்வேறு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பொலனறுவை மன்னம்பிட்டியைச் சேர்ந்த பணிப்பெண் டி.எம்.ஷாந்தனி நாளை செவ்வாய்க்கிழமை நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி தெமட்டகொட பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் ஊடாக ஷாந்தனி ஜோர்தான் சென்றிருந்தார்.

பின்னர் சுகவீனமுற்ற அவர் பணிபுரிந்த வீட்டு உரிமையாளர்களிடம் நோய் குணமாகுவதற்கு உபாதை ஒழிப்பு மருந்தை கோரியுள்ளார். அதன் போது அவருக்கு வீட்டு உரிமையாளர்களால் ஆணிகள் போடப்பட்ட தண்ணீர் குவளை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாளை அவர் நாடு திரும்பவுள்ளமையையிட்டு ஷாந்தனியின் உறவினர்களும் அயலவர்களும் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## சூதாட்ட சட்டத்திற்கு ஆதரவளிக்காத எம்.பிக்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

அண்மையில் நிறைவேற்றப்பட்ட சூதாட்ட சட்டத்திற்கு ஆதரவளிக்காத 38 நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆளும் கட்சியில் 162 பேர் அங்கம் வகிப்பதாகவும் இதில் 38 பேர் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க தவறியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக இவ்வாறு அரசாங்கத்தினால் முன் வைக்கப்படும் சட்ட மூலங்களை நிராகரிக்க வேண்டாம் என ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் சட்டவிரோத கசினோ நிலையம் ஒன்று பற்றிய தகவல்கள் நாடாளுமன்றில் வெளியிடப்பட்டதாகவும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிழைகளை யார் சுட்டிக்காட்டினாலும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தாம் தயங்கப்போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)













ஊவா மாகாணத்தின் அனுசரணையுடன் யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள இரண்டு மாடிக்கட்டடத்தின் அடிக்கல் நாட்டுவிழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் ஊவா மகாண முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைப்பதையும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன்,யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த கத்துருசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினருக்கு வித்தியாலய அதிபர் நினைவுப்பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்,என்.குமார்)




# ஹர்பஜன் அதிரடி இந்தியா பதிலடி

(ஹைதராபாத்)

ஹர்பஜன் சிங்கின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களையிழந்து 436 ஓட்டங்களை எடுத்து முன்னிலை பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபுற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 12 ஆம் திகதி ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 350 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கின் றோஸ் 102 ஓட்டங்களையும் குப்தில் 85 ஓட்டங்களையும் ரைடர் 70 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் சிறிசாந், ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சேவாக்-காம்பீரின் சிறப்பான ஆரம்பத்தின் மூலம் பலம் பெற்றது.

பின்னர் களமிறங்கிய டிராவிட், லக்ஷ்மன் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியும் இந்திய அணி 336 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் பின்வரிசையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஹர்பஜன் சிங் அரைச்சதம் விளாச இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 9 விக்கெட்டுக்களையிழந்து 436 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இறுதி விக்கெட்டுக்காக 69 ஓட்டங்களை இணைப்பாட்டமாக குவித்து அசத்திய ஹர்பஜன் சிங் 85 ஓட்டங்களுடனும் சிறிசாந்த் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

முன்னதாக வீரேந்திர சேவாக் 96 ஓட்டங்களையும் வி.வி.எஸ்.லக்ஷ்மன் 74 ஓட்டங்களையும் காம்பீர் 54, டிராவிட் 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி 4 விக்கெட்டுக்களையும் சௌத்தி 3 விக்கெட்டுக்களையும் மார்டீன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.




இப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் ஒருவிக்கெட் கைவசமுள்ள நிலையில் 86 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

# மோர்கல், போத்தா அசத்தல் தென்னாபிரிக்கா ஆதிக்கம்

மோர்னி மோர்கல், போத்தாவின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் 248 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

பாகிஸ்தான்- தென்னாபிரிக்க அணிகள் மோதும் இரண்டு இருபது-20 போட்டிகள், ஐந்து ஒருநாள் போட்டிகள், மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3:2 என்ற கணக்கிலும் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிய நிலையில் முதலாவது டெஸ்ட் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 380 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 100 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 80, ஜக் கலிஸ் 73, பீற்றர்சன் 67 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உமர்குல், அப்துல் றீமான் ஆகி யோர் தலா 03 விக்கெட்டுக்களையும், வாகாப் றியாஸ், சயிட் அஜ்மல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 248 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மொகமட் ஹபீஸ் 60 ஓட்டங்களையும், அசார் அலி 56 ஓட்டங்களையும், தௌவிக் உமர் 42, யூனிஸ்கான் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மோர்னி மோர்கல் 05 விக்கெட்டுக்ளையும், ஜெகான் போத்தா 03 விக்கெட்டுக்களையும், ஸ்ரெயின், ஹரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 132 ஓட்டங்களால் முன்னிலைபெற்ற தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 2 விக்கெட்டுக்களையிழந்து 139 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹசிம் அம்லா 44 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 32 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளதுடன் அணித்



தலைவர் சிமித் 34, பீற்றர்சன் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றீமான், அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் நான்காம் நாளான இன்று தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 271 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

## ஹாட்லி கல்லூரி வீரர் புதிய சாதனை

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் இடம்பெற்று முடிந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அகில இலங்கை ரீதியான மெய்வன்மைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த வடிவேற்கரசன் ஹரிகரன் தேசிய மட்டத்திலான சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

19 வயதுப்பிரிவைச் சேர்ந்த இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 20 வயதுப் பிரிவினருக்கான தட்டெறிதல் போட்டியில் கலந்துகொண்டு 44.60 மீற்றர் தூரம் எறிந்து இந்தச் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சார்பில் இவர் போட்டியில் கலந்து கொண்டார். 2007 ஆம் ஆண்டு 37.57 மீற்றர் தூரம் ஏற்படுத்தப்பட்ட சாதனையை இந்தாண்டு ஹரிகரன் முறியடித்துள்ளார்.

இவர் கடந்த காலத்தில் தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளிலும் மற்றும் திறந்த போட்டிகளிலும் கலந்துகொண்டு பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்து.

இதேவேளை வவுனியா மாவட்டத்தின் தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தின் அணியில் இடம்பெற்ற வீராங்கனை, இராஜமனோகரன் தர்சினி 20 வயதுப் பிரிவினருக்கான குண்டெறிதல் போட்டியில் கலந்துகொண்டு வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டுள்ளார்.

# பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் ரொபின் சொடர்லிங் சம்பியன்




சுவீடனைச் சேர்ந்த ரொபின் சொடர்லிங் பரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதிப் போட்டியில் சம்பியனார். இறுதிப் போட்டியில் பிரான்ஸைச் சேர்ந்த கோல் மொன்பில்ஸை வீழ்த்தி சொடர்லிங் வெற்றியீட்டியுள்ளார்.

இதில் 6:1, 7:6, 7:1 என்ற செற் கணக்கில் மொன்பில்ஸை வீழ்த்தி சொடர்லிங் வெற்றியீட்டியுள்ளார். பிரான்ஸ் நாட்டு மக்களின் பலத்த ஆதரவுக்கு மத்தியில் போட்டியிட்ட மொன்பில்ஸ் கடுமையாகப் போராடிய போதிலும் வெற்றியை எட்ட முடியவில்லை.

இந்த வெற்றியின் மூலம் உலக டென்னிஸ் தரவரிசையில் சொடர்லிங் நான்காமிடத்திற்கு முன்னேறினார்.

2000 ஆம் ஆண்டு தோமஸ் இன்குயூவிஸ்டிற்கு பின்னர் முதல் தடவையாக சுவீடன் வீரர் ஒருவர் மாஸ்டர் பட்டமொன்றை வென்றுள்ளமை இதுவே முதல்தடவையாகும்.

# ஊக்கமருந்துப் பரிசோதனையில் மஞ்சு வன்னியாராச்சி தோல்வி



புதுடில்லியில் நடைபெற்ற 19 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் 56 கிலோக்கிராம் பண்டம் எடைப்பிரிவில் போட்டியிட்ட மஞ்சு வன்னியாராச்சி ஊக்கமருத்துப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளார்.

பொதுநலவாய விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்ற சமயத்தில் மஞ்சு வன்னியாராச்சியிடம் பெற்றுக்கொண்ட சிறுநீர்ப் பரிசோதனையின் போது அவர் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தை உபயோகித்ததாகக் கூறப்பட்டது.

எனினும் முதலாவது சிறுநீர்ப் பரிசோதனையில் திருபதியடையவில்லையாயின் மீண்டும் சிறுநீர்ப் பரிசோதனை செய்ய முடியுமென தெரிவிக்கப்பட்டதையடுத்து மஞ்சு வன்னியாராச்சி மீண்டும் சிறுநீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் ஊக்கமருந்துச் சோதனையின் முடிபில் மஞ்சு வன்னியாராச்சி ஊக்க மருந்து பாவிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வேல்ஸ் நாட்டைச்சேர்ந்த ஷோன் மக்கோல்றிக்கை, வன்னியாராச்சி புள்ளிகளடிப்படையில் தோல்வியுறச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் நடந்த மோசடி...

காணாமல் போனவர்களை கண்டு பிடித்து தருகிறோம் என்ற செய்தி கடந்த ஒரு வாரமாக தொலைபேசி எங்கும் பரவிக் கொண்டிருந்தது. குறித்த தொலைபேசி இலக்கம் வன்னியில் உள்ள பல மக்களின் கைகளுக்கு சென்றுள்ளன.

மக்கள் இந்த இலக்கத்தை அழுத்தி தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளையும் விடுவிக்க வேண்டும் என்று கோரிய பொழுது கவலைப்பட வேண்டாம். உங்கள் பிள்ளைகளை கொண்டு வந்து தருகிறோம் என்று கூறியிருக்கின்றனர்.

மிக மௌனமாக இந்த விடயத்தை கையாள வேண்டும் என்று மர்ம நபர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த விடயத்தை வெளியில் சொன்னால் உங்களுக்கு பிள்ளைகள் கிடைக்க மாட்டார்கள் என்று நினைத் துக் கொள்ளுங்கள் என குறித்த மர்ம நபர்கள் அச்சுறுத்தியிருக்கிறார் கள். நாங்கள் யாரிடமும் சொல்ல மாட்டோம். எங்கள் பிள்ளைகளை எங்களுக்குத் தாருங்கள் என்று மன்றாடியிருக்கிறார்கள்.

மேஜர் மதியழகன், மேஜர் சீலன் என்ற பெயரில் இந்த மர்ம நபர்கள் தம்மை மக்களிடம் தொலைபேசியில் அடையாளப்படுத்தியுள்ளனர். இறுதி யுத்தத்தில் காணாமல்போன போராளிகள், பொதுசனங்கள் என 5 ஆயிரம் பேருக்கு மேல் தம்மிடம் இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

மக்கள் தொலைபேசியில் பேசும் பொழுது தொடர்பில் இருங்கள் பார்த்துச் சொல்கிறோம் என்று விட்டு, உங்கள் உறவு உயிருடன் உள்ளார்; நீங்கள் பணத்துடன் வாருங்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலம் என்று பாடசாலைக்கு பணத்துடன் வரும்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மக்கள் பலர் கனகபுரம் பாடசாலைக்கு பணத்துடன் வந்துள்ளார்கள். மர்ம நபர்கள் பாடசாலை அதிபருக்கும் குறித்த சம்பவத்தை அறிவித்து பாடசாலையில் நடத்த அனு மதி கேட்டுள்ளார்கள்.

தங்கள் பிள்ளைகள் விடுவிக்கப் படப் போகிறார்கள் என்ற பெற்றோரின் கோரிக்கையாலும் அதிபர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

ஆனால் தொடர்ந்து நடந்த உரையாடல்களும் சம்பவங்களும் சந்தேகத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் சேதுபதி படைத் தரப்பிற்கு குறித்த விடயத்தை அறிவித்ததாக தெரிவித்தார்.

அதேவேளை இப்படியொரு சம்பவம் நடைபெறுகிறது என்பதை தாம் மிக இரகசியமாக பொலிஸாருக்கும் படையினருக்கும் அறிவித்ததாக மக்கள் தெரிவித்தார்கள்.

இதனை அடுத்து நேற்று முதல் கனகபுரம் பாடசாலை பொலிஸாரின் கணகாணிப்பில் இருந்து வந்துள்ளது. குறித்த மர்ம நபரின் முகவர்கள் நேற்று கனகபுரம் மகாவித்தியாலயத்திற்கு வந்த பொழுது பொது மக்களின் வேடத்தில் நின்ற பொலிஸார் அவர்களை வளைத்துப் பிடித் துள்ளனர்.

எனினும் மோசடியை நடத்திய குறித்த நபர் பிடிபடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. முகவர்களாக இயங்கிய மூன்று பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இம் மோசடியில் சிலரின் பணம் பறிபோயுள்ளது. இந்த நபர்கள் வீடுகளுக்குச் சென்றும் மக்களிடமிருந்து பணத்தை வாங்கியுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

ஐம்பதாயிரம் முதல் மூன்று இலட்சம் வரையான பணம் இப்படி அபகரிக்கப்பட்டுள்ளது. இம் மோசடி சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

# இலங்கை தலைவர்...

கும் உலகின் அனைவருக்கும் கிடைக்கப்பெற்ற வெற்றியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனநாயக் விரோத ஆட்சியாளர்கள் அடைந்த தோல்வியாக இதனைக் கருத வேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக ஆங்சான் சூகியின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டிருந்தது.

ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டுவரும் உலகத்தலைவர்களின் நடவடிக்கைகள் நிரந்தரமற்றது. என்பது ஆங்சான்சூகியின் விடுதலை மூலம் மீளவும் நிரூபிக்கப் பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பர்மாவினதும் இலங்கையினதும் ஜனநாயக உரிமைகளை ஒப்பிட்டு நோக்குவதற்குச் சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

சரத் பொன்சேகாவிற்கு எதிரான தண்டனை தொடர்பில் இலங்கைத் தலைவர்கள் பர்மாவின் தீர்ப்பினை வழிகாட்டியாகக் கொள்ள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ந-5)

# கோத்தபாய படு...

2006 ஆம் ஆண்டு கொள்ளுப் பிட்டி பித்தல சந்தியில் பாதுகாப்புச் செயலாளரை இலக்குவைத்து தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றத் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த சந்தேக நபர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ந-5)

# ஜே.வி.பி.உறுப்பினர்...

நிலையில் ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றிரவு யாழ். கந்தர்மடம் பழம் வீதியிலுள்ள யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனின் வீட்டிற்கு சென்றுள்ளனர்.

அங்கு பத்மினி சிதம்பரநாதனுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது இரண்டுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் சென்ற இனந்தெரியாதோர் வீட்டினுள் புகுந்து கதிரைகளைத் தூக்கி ஜே.வி.பி. உறுப்பினர்களின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனினும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், அவரின் உறவினர்களால் வீட்டிற்குள் அழைத்துச் செல்லப்பட்டதால் தாக்குதலிலிருந்து தப்பியுள்ளார்.

அத்துடன் இனந்தெரியாதோர் ஜே.வி.பி. உறுப்பினர்கள் வந்த வாகனத்தையும் தாக்கி சேதமாக்கிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவத்தில் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, கட்சியின் முன்னாள் உறுப்பினர் எம்.மோகன், யாழ்.குழுத்தலைவர் லலித்குமார், லங்கா ஊடகவியளாளர் பிரியந்த ஆகியோர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் படுகாயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் உறுப்பினர்களை பாதுகப்பாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் சிதம்பரநாதன் கருத்துத் தெரிவிக்கையில், நேற்றுக் காலை சந்திப்பொன்றை நடத்துவதற்காக ஜே.வி.பியினர் அனுமதி கேட்டதாகவும் எனினும் தாம் அதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் கூறினார்.

எனினும் திடீரென நேற்று மாலை 6.30 மணியளவில் ஜே.வி.பியின் உறுப்பினர்கள் தமது வீட்டிற்கு வந்து தன்னுடன் கதைத்துக்கொண்டிருந்த போது கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்த திருமதி பத்மினி சிதம்பரநாதனும் அந்நேரம் வீடுதிரும்பியுள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் ஜே.வி.பி. உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக தெரிவித்தார். (ந-5)

# முப்படைத் தலை...

தில் 48 ஏக்கர் பரப்பளவில் இந்த படைத் தலைமையகங்கள் அமைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொழும்பு நகரின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவம், கடற்படை மற்றும் வான் படைத் தலைமையகங்கள் மற்றும் ஏனைய முக்கிய படை அலுவலகங்கள் ஒரே பிரதேசத்திற்குள் அமைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகார சபை பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# தீவகத்தில் ஆணைக்குழு விசா...

மகளிர் கல்லூரியில் தங்க வைத்தனர்.

அங்கு தங்கியிருந்த போது புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களை பதிவு செய்யுமாறு இராணுவத்தினர் அறிவித்தனர்.

இதனால் திருமணம் செய்வதற்கு முன் புலிகள் இயக்கத்திலிருந்த எனது கணவரும் பதிவு செய்து கொண்டார்.

பின்னர் எங்களை கைதடி முகாமிற்கு மாற்றம் செய்யும் போது புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களை வேறாக பிரித்து இராணுவம் தடுத்து வைத்தது.

அந்த முகாமில் எனது கணவரையும் தடுத்து வைத்தனர். இந்நிலையில் 2009ஆம் ஆண்டு யூன் 26ஆம் திகதி எனது கணவரை விசாரணைக்காக தெல்லிப்பழை தடுப்பு முகாமிற்கு இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர்.

அதற்குப் பின் எனது கணவர் தொடர்பான எதுவித தகவல்களும் இல்லை. எனவே எனது கணவரை மீட்டுத்தாருங்கள் என வளர்மதி சாட்சியமளித்தார்.

இவ் விசாரணையின் போது சாட்சியமளித்த நாரந்தனையைச் சேர்ந்த மகேந்திரன் ரூபிமாலா தெரிவிக்கையில்,

நயினாதீவு முதலாம் வட்டாரத்தில் வசித்து வந்த எனது குடும்பம் தற்போது நாரந்தனையில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றது.

எனதுகணவர் 2006ஆம் ஆண்டு டிசம்பர் 09ஆம் திகதி கரைநகரில் உள்ள எனது தாயார் வீட்டிற்குச் சென்றார்.

அங்கு சென்று விட்டு மூன்று தினங்களின் பின் வேலணையில் நடந்த திருமண வீட்டிற்குச் சென்று திரும்புகையில் காணாமல் போனார்.

இது தொடர்பில் நாம் வேலணைக்குச் சென்று விசாரித்தபோது, எனது கணவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அழைத்துச் சென்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அவ்வாறு மோட்டார் சைக்கிளில் எனது கணவரை ஏற்றிச் சென்றவர்கள் இருவரும் புலனாய்வுப் பிரிவினர் எனவும் தகவல் கிடைத்தது.

அதற்குப் பின் எனது கணவரை சித்தன்கேணி, ஊரெழு, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் கண்டதாக சிலர் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு மற்றும் பொலிஸில் முறைப்பாடு செய்தும் எனது கணவர் தொடர்பில் எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

அத்துடன் ஊர்காவற்றுறை நீதிமன்றம் எமக்கு அழைப்பு விடுத்து விசாரணை செய்தது என அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

**பிரதிக் கல்விப் பணிப்பாளர் தொடர்பில் தகவல் இல்லை**

இதேவேளை இவ்விசாரணையின் போது சாட்சியமளித்த தியாகராஜா மேரிபுஷ்பம் தெரிவிக்கையில், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் வாழ்ந்து வந்த எனது குடும்பம் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி யுத்தம் காரணமாக வள்ளிபுரம் என்ற இடத்துக்கு இடம் பெயர்ந்து சென்றோம்.

அங்கிருந்து பாதுகாப்பு வலயமான தேவிபுரத்துக்கு இடம்பெயர்ந்தோம்.

பின்னர் அரசு இரணைப்பாலைப் பகுதியை பாதுகாப்பு வலயமாக அறிவித்த போது அங்கு இடம் பெயர்ந்தோம்.

அங்கிருந்து புதிய பாதுகாப்பு வலயமான வலைஞர் மடத்திற்கு இடம் பெயர்ந்தோம்.

வலைஞர் மடத்திலிருந்த போது 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் திகதி இரண்டாவது மகனை விடுதலைப்புலிகள் பிடித்துச் சென்றனர்.

எனினும் எனது மகன் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி உயிரிழந்துவிட்டதாக புலிகளின் குரல் மூலம் அறிந்து கொண்டோம். இந் நிலையில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி எனது கணவர் இரு மகன்களுடன் புதுமாத்தளனிலிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றார்.

நானும் மகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல முடியவில்லை. பின்னர் யுத்தம் நிறைவடைந்த நிலையில் நாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்று எனது கணவரையும் மகன்களையும் தேடியபோது எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை.

எனது கணவர் தியாகராஜா முல்லைத்தீவு கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றினார்.

எனது கணவரையும் பிள்ளைகளையும் மீட்டுத்தாருங்கள் என தியாகராஜா மேரி புஷ்பம் சாட்சியமளித்தார். (ந-5)

# யாழ்.பொது நூலகத்தில்...

நான்கு தினங்களாக யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக பிரிவு ரீதியாக பொதுமக்களின் சாட்சியங்களை பதிவு செய்தனர்.

இந் நிலையில் ஆணைக்குழுவினர் நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ். பொது நூலகத்திற்கு விஜயம் செய்தனர்.

இதன் போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர். டி.சில்வாவுக்கு யாழ். பொது நூலக நூலகர் தனபாலசிங்கம் நூலகத் தகவல்களை எடுத்துக் கூறினார்.

அப்போது அண்மையில் யாழ். பொது நூலகத்தில் சிங்கள சுற்றுலா பயணிகள் அசம்பாவிதத்தில் ஈடுபட்டனரா என ஆணைக்குழுவின் தலைவர் நூலகரிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த நூலகர் தனபாலசிங்கம் சுற்றுலாப் பயணிகள் நூலகத்தைப் பார்வையிடுவதற்கு ஒரு நேர ஒழுங்கு பேணப்படுகின்றது.

எனினும் சம்பவம் நடைபெற்ற தினத்தில் நிகழ்வு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இதனால் சுற்றுலாப் பயணிகள் குழப்பத்தில் ஈடுபட்டனர். பின்னர் நூலகத்தை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட போது இரவல் வழங்கும் பகுதியிலுள்ள நூல்களை தூக்கிவீசினர் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு அசம்பாவிதத்தில் ஈடுபட்டவர்கள் மது போதையில் இருந்தனரா? அவர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனரா? என ஆணைக்குழுவின் தலைவர் நூலகரிடம் கேட்டார்.

இவ்வாறு எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நூலகர் பதிலளித்தார்.

இதன்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் யாழ்ப்பாண விஜயத்தின் பாதுகாப்பிற்கு பொறுப்பாகவிருந்த யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உயர் அதிகாரியை அழைத்த ஆணைக்குழுவின் தலைவர், பொது நூல் நிலையத்தில் அசம்பாவிதத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏன் சட்ட. நடவடிக்கை எடுக்கவில்லை என வினவினார். அதன் போது பொலிஸ் அதிகாரி மௌனம் சாதித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா முன்னாள் சட்டமா அதிபர் என்பதுடன் பிரபல சட்டமேதை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# கடற்புலிகளின் துணை...

நொச்சி வீழ்ச்சியடைந்த பின்னர் தமது கொல்லப்பட்ட தளபதிகளையோ அல்லது போராளிகளையோ விடுதலைப்புலிகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதையும் நிறுத்திவிட்டது.

எனவே குழப்பமான நிலையே போரின் இறுதி நாட்களில் ஏற்பட்டன. சாலைப் பகுதியை 55ஆவது படையணி கைப்பற்ற முன்னரே விடுதலைப் புலிகளின் ஒரு குழுவினர் விநாயகம் தலைமையில் வெளிநாடு ஒன்றுக்குச் சென்று விட்டனர்.

அதற்கான உத்தரவை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் புலனாய்வுத்துறைத் தலைவர் பொட்டு அம்மானுமே மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் விநாயகத்தின் சந்தேக பெயரான மைல் போஃர் எனப்படும் தொலைத் தொடர்பு உரையாடலை தொடர்ந்த வண்ணம் விடுதலைப் புலிகள் படையினரை ஏமாற்றியிருக்கின்றனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.